பாக்கியவான்கள் யார்?


The Beatitudes
Matthew 5:3-10
Blessed are the poor in spirit:
for theirs is the kingdom of heaven.
Blessed are they that mourn:
for they shall be comforted.
Blessed are the meek:
for they shall inherit the earth.
Blessed are they which do hunger and thirst
after righteousness: for they shall be filled.
Blessed are the merciful:
for they shall obtain mercy.
Blessed are the pure in heart:
for they shall see God.
Blessed are the peacemakers:
for they shall be called the children of God.
Blessed are they which are persecuted for
righteousness' sake: for theirs is the
kingdom of heaven.

(மலைப் பிரசங்கத்தின் முதற்பகுதி)

அறிமுகம்
1. முதலாவது பேறு
“ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள் பரலோகராஜ்யம் அவர்களுடையது”
2. இரண்டாம் பேறு
“துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் ஆறுதலடைவார்கள்”
3. மூன்றாம் பேறு
“சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்”
4. நாலாம் பேறு
“நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் திருப்பதியடைவார்கள்”
5. ஐந்தாம் பேறு
“இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் இரக்கம் பெறுவார்கள்”
6. ஆறாம் பேறு
“இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்”
7. ஏழாம் பேறு
“சாமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனுடைய புத்திரர் எனப்படுவார்கள்”
8. எட்டாம் பேறு
“நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள். பரலோகராஜ்யம் அவர்களுடையது. என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியான்களாயிருப்பீர்கள். சந்தோஷப்பட்டு, களிகூருங்கள். பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும். உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே”
முடிவுரை: அருட்பேறுகளும் கிறிஸ்துவும்

அறிமுகம்

கிறிஸ்துவின் மலைப்பிரசங்கத்தின் அமைப்பு, நோக்கம், நடைமுறைப்படுத்தல் குறித்துப் பெரிதும் கருத்து பேறுபாடுகள் உள்ளன. கிறிஸ்தவர்களுக்குரிய நன்னெறிக்கோட்பாடுகளின் தொகுப்பு எனவும் எல்லா மக்களுக்காகவும் அருளப்பட்டுள்ள ஒரு நலமார்ந்த வாழ்க்கைத் தத்துவமாகவும் அதனை மதிக்கின்றனர். காலஞ்சென்ற டால்ஸ்டாய் போன்ற அறிவுடைப் பெருமக்கள், மற்றையோர் அதன் குறிக்கப்பட்ட காலச் சமயநிலையைச் சுட்டிக்காட்டி, இந்நிகழ்காலத்தில் சமயநிலையில் வாழ்கிற பரிசுத்தவான்களுக்கு அது உரிதன்று எனவும் இனி வரவிருக்கிற கிறிஸ்துவின் ஆயிரம்வருட ஆட்சிக்காலத்திலுள்ள விசுவாசிகளுக்கே உரியதாகுமெனவும் வற்புறுத்துகின்றனர். ஆயினும் அதன் மெய்யான உணர்வைத் தூண்டுமாறு இரண்டு வேத வசனங்கள் வெளிப்படுத்துகின்றன. மத்தேயு 5:1-2 வசனங்களில் கிறிஸ்துவானவர் இங்கு தம்முடைய சீடர்களுக்கு உபதேசித்ததாக நாம் காண்கிறோம். மத்தேயு 7:28-29 வசனங்களிலிருந்து அவர் திரள்கூட்டமான மக்களுக்கு உபதேசம்பண்ணினாரென்று நாம் தெளிவாய் அறியலாம். ஆகவே நம்முடைய கிறிஸ்து இயேசுவின் மலைச்சொற்பொழிவில் விசுவாசிகள் அவிசுவாசிகளாகிய இரு சாரார்களுக்கும் தேவையான அறிவுரைகள் அடங்கியுள்ளன என்பது தெளிவு.

குறைபாடுடைய யூதமார்க்கத்தைச் சார்ந்து வாழ்ந்துவந்த பொதுமக்களிடம் நிகழ்த்தப்பெற்ற கிறிஸ்துவின் முதலாவது சொற்பொழிவு இது என்பதனை நாம் உள்ளத்திற்கொள்ளுதல் அவசியம். அவ்வண்ணமே சீடர்களுக்கு இது அவருடைய முதற்பேருரையாகவும் இருத்தல்கூடும். கிறிஸ்துவின் நன்னெறிக் கோட்பாடுகளை உணர்த்துவதோடமையாது. பரிசேய மார்க்கத்திலுள்ள குறைபாடுகளை வெளிப்படுத்துமாறு, நியாயப்பிரமாணமுறைகளில் தேறின வேதபாரகர்களின் மனச்சாட்சியைத் தட்டி எழுப்புமாறு இம்மலைச் சொற்பொழிவானது அமைந்துள்ளது. மத்தேயு 5:20 ஆம் வசனத்தில், “வேதபாரகர் பரிசேயருடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள்” என்று அவர் சொல்லுகிறார். மேலும் ஐந்தாம் அதிகாரத்தில் இறுதிமட்டும, அவர் தம்முடைய பேருரையைச் செவிமடுக்கிற மக்கள் அவருடைய நிறைவான நீதியைக் காணுமளவுக்கு அவ்வளவாக விழிப்புணர்த்தும்படி நியாயப்பிரமாணத்தின் ஆவிக்குரிய மெய்ந்நிலையினை விளக்கி உரைத்துள்ளார். பரிசேய மார்க்கத்தின் தலைவர் எழுத்தின்படியுள்ள நியாயப்பிரமாணத்தின் புறம்பான சடங்குகளையே வற்புறுத்துகிறபடியால், நியாயப்பிரமாணத்தின் ஆவிக்குரிய மெய்ந்நிலையைக் குறித்துள்ள அவர்களுடைய அறியாமையே பரிசேய மார்க்கத்தின் மெய்யான ஆதாரமாயிருந்தது. ஆகையால்தான், நியாயப்பிரமாணத்தின் உள்ளான

மெய்ப்பொருளையும் அதன் தேவையையும் வற்புறுத்துவதன்வாயிலாக யூதமக்களின் மனச்சாட்சியைத் தட்டி எழும்புவது நம்முடைய கர்த்தருடைய நன்னோக்கமாயிருந்தது.

இம்மலைப் பிரசங்கமானது, மத்தேயுவின் சுவிசேஷத்தில் மாத்திரமே காணப்பபடுகிறதென்பது குறிப்பிடத்தக்கதாகும். அதற்கும் லூக்கா 6ம் அதிகாரத்திலுள்ள சமனான ஓரிடத்தில் நிகழ்த்தப்பெற்ற பிரசங்கத்திற்குமிடையேயுள்ள வேறுபாடுகள் குறிப்பிடத்தக்கனவும் எண்ணற்றனவுமாயிருக்கின்றன. நான்கு சுவிசேஷங்களுள் மத்தேயு எழுதின சுவிசேஷமே யூதேயா நாட்டின் பண்பாடுகள் நிறைந்த சுவிசேஷமாயிருக்கிறதென்பது மெய்தான். ஆயினும் கடந்த காலத்திலும் அன்றி எதிர்காலத்திலுமுள்ள யூதர்களுக்குரிய சுவிசேஷமாய்கொண்டு அதன் பயன்படுதன்மையே மட்டுப்படுத்துதல் பெருந்தவறாகும். மத்தேயு சுவிசேஷத்தின் திறப்பின் வாயிலிலுள்ள வசனத்தில் கிறிஸ்துவானவர் இரட்டிப்பான முறையில் அறிமுகப்படுத்தட்டிருப்பதானது அவ்வாறு மட்டுப்படுத்தலாகாதென்று நம்மை எச்சரிக்கிறது. அதில் அவரைத் தாவீதின் குமாரனாகவும், விசுவாசிக்கிற யாவருக்கும் தகப்பனாகிய (ரோமர் 4:11) ஆபிரகாமின் குமாரனாகவும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளமை காண்க. ஆகையால், இம்மலைப்பிரசங்கமானது எல்லாக் காலங்களிலும் ஏற்ற ஆவிக்குரிய தத்துவங்களையே விளக்கி உரைக்கிறதென்பதில் நாங்கள் முழு நிச்சயமுள்ளவர்கயரிருக்கிறோம். இந்த அடிப்படையில்தானே மேலும் இதனைத் தொடர்வோம்.

கிறிஸ்துவின் முதலாவது பிரசங்கமானது, அவருடைய முன்னோடியான யோவான் ஸ்நானகனின் பிரசங்கத்தைப் போலவே “மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபமாயிருக்கிறது” (மத்.3:2, 4:7) என்று சிறிய, ஆயினும் தீர்மானமுடைய ஒரே வாக்கியத்தில் தொகுத்துரைக்கப்பட்டுள்ளமை காண்க. பரலோக ராஜ்யம் என்றால் என்ன, அதன் முன்னேற்றம் அல்லது வளர்ச்சியின் நடைமுறைக்குரிய காலம் எது என்று நம்மைப் பெரிதும் ஆர்வமூட்டுகிற பொருள் குறித்து இந்தக் குறுகிய வேத பாடத்தில் ஆராய்வது ஏற்புடைத்தன்று. ஆயினும் பரலோக இராஜ்யத்தின் குடிமக்களையும், அவர்கள் மீது கிறிஸ்துவானவர் அறிவித்துள்ள ஆசீர்வாதத்தின் உன்னதமான முறைகளையுங்குறித்து இந்த எட்டுபேறுகள் நமக்கு அதிகமாய்ப் போதிக்கின்றன.

ஒருமுறை கிறிஸ்துவானவர் மாம்சத்தில் வந்தார். ஆயினும் மறுபடியும் அவர் வரப்போகிறார். அவருடைய இவ்விருவருகைகளும் பரலோக இராஜ்யத்துடன் தொடர்புடைய ஒரு சிறந்த நோக்கத்தைத் தன்னகத்தே கொண்டுள்ளன. தனிப்பட்ட ஆத்துமாக்களுக்குள் பரலோக இராஜ்யமாகிய பேரரசின் அடிக்கல்

நாட்டி அவர்கள் நடுவிலும் அவர்கள் மீதும் அவ்வரவை நிலை நாட்டும் நோக்கத்துடன் நம்முடைய கர்த்தருடைய முதலாம் வருகை அமைந்தது. அவருடைய இரண்டாம் வருகையோ அப்பேரரசினை மகிமையில் நிலைநிறுத்தும்படி அமையும். ஆகையால், நாம் பரலோக இராஜ்யத்தைச் சேர்ந்தவர்களா என்றும், அந்த இராஜ்யத்தின் சிறப்புரிமைகள், காப்புரிமைகள் வருங்காலத்தின் பலன் ஆகியவை நிகழ்கால எதிர்காலங்களிலுள்ள நம்முடைய சுதந்திரத்தின் ஒரு பாகமாயிருக்கின்றனவா என்றும் அறிந்துகொள்ளவேண்டும்.

அதன்பொருட்டுப் பரலோக இராஜ்யத்தில் வாழ்கிற குடிமக்களின் ஒழுக்க நிலை குறித்து அறிந்துகொள்வது நமக்கு இன்றியமையாத உயிர்நிலைத் தேவையாயிருக்கிறது. இப்பேறுகள் போதிக்கிற, நம்முடைய பயபக்திக்கும் கவனத்திற்குமுரிய இப்பாடத்தின் இன்றியமையா நிலை இவ்வாறு அறிந்துகொள்ளமுடியும். அதனை நாம் முழுமையாகவே ஆராயவேண்டும். இப்பேறுகளுள் ஒன்றை மாத்திரம் ஆராயும்படி நாம் எடுத்துக்கொள்ளமுடியாது. இப்பேறுகள் அனைத்தும் ஒரு கருத்தோவியமாய்க் காட்சியளிக்கின்றன. ஓர் ஓவியன் ஒரு படத்தினை வரையும்போது, அப்படத்திலுள்ள ஒவ்வொரு கோடும் எழிலுடன் கூடிய ஓவியனின் கைவண்ணத்துடன் காட்சியளிக்கிறது. அக்கோடுகளிடையேயுள்ள உறவுமுறையே அவைகளின் ஒன்றிசைந்து ஒளிருகிற ஒருமைப்பாடுதான் வெளிப்படுத்துகிறது. ஆயினும் வேறுவேறான கலைவடிவங்களும் எழில் நுட்பங்களுமாகிய அவைகளின் சேர்க்கை நிலையில்தான், கண்களைக் கவருகிற முழுமையான படம் நம்முன்னாக் காட்சியளிக்கிறது.

அவ்வண்ணமே மலைப்பிரசங்கத்திலுள்ள இவ்வெட்டுபேறுகள் ஒவ்வொன்றும் தனிப்பட்ட நிலைமையில் தனக்கே உரிய அழகோடும் பொலிவோடும் விளங்கி நம்முடைய ஆண்டவருடைய கைவண்ணத்தைக் காண்பிக்குமாயினும், அவைகளின் சேர்க்கை நிலையில்தான் பரலோக இராஜ்யத்தில் வாழ்கிற ஒரு குடிமகனுடைய முழுமையான ஓவியத்தை நாம் பெற்றுக்கொள்ளுகிறோம்.

“பணமுமின்றி விலையுமின்றி” (ஏசாயா 55:1) தேவனுடைய மாபெரும் இரட்சிப்பானது இலவசமாய் நமக்கு வழங்கப்படுகிறது. இது தேவனுடைய கிருபையின் வரமாகிய மகா இரக்கத்தின் ஈவு. விலைகொடுத்து வாங்கும்படி தேவன் தம்முடைய இரட்சிப்பினை விலைக்கு வழங்குவாராயின், ஏழைப் பாவியாகிய மனிதன் இதனைப் பெற்றுக்கொள்ள முடியாது. விலை கொடுத்து வாங்க அவனிடம் பணமில்லை. ஆயினும், பெரும்பான்மையான மக்களோ இதனை உணராமலிருக்கிறார்கள்: ஆம் பாவத்தின் விளைவாய் நம்முடைய அகக்கண் பார்வையே இழந்த நம்முடைய குருடான கண்களைப் பரிசுத்த ஆவியாதனவர் திறந்தருளின நாள்மட்டும் நாமும் அவர்களைப்போலவே

உணர்வில்லாமலிருந்தோம். மரணத்திலிருந்து ஜீவனுக்குள் கடந்து வருகிறவர்களும், தங்களுடைய வறுமையின் கொடுமையை உணர்கிறவர்களும் பிச்சைக்காரர்களுக்குரிய நிலையின் ஏற்றுக்கொள்ளுகிறவர்களுமாகிய மக்களே தேவன் அளிக்கிற இத்திருவருட் பிச்சையைப் பெற்று மகிழ்கின்றனர். அவர்களே இம்மெய்யான செல்வத்தை நாடித்தேட மேலும் முற்படுகின்றனர். “தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது” (மத் 11:5) என்பது இதுவே. அவர்களுடைய செவிகளுக்கு மட்டுமல்ல, அவருடைய இருதயதங்களுக்கும் அறிவிக்கப்படுவது இதுவே.

பரிசுத்த ஆவியானவர் தம்முடைய செயலின்படியே ஒருவனுடைய உள்ளத்தில் ஆவியின் எளிமையினை அதாவது வெளுமையும் சிறுமையுமான அவனுடைய நிலைமையினை உணர்த்தும்பொழுதுதான், அவனுக்கு விழிப்புணர்வு உண்டாகிறது. “என்னுடைய நீதியெல்லாம் அழுக்கான கந்தையாயிருக்கிறது” (ஏசாயா 63:6). என்னும் வேதனை நிறைந்த கண்டுபிடிப்பிலிருந்தே இவ்விழிப்புணர்வு தோன்றுகிறது. மும்மைசால் பரிசுத்தராகிய தேவனுடைய முன்னிலையில் என்னுடைய மகா மேன்மையான செயல்கள் ஒரு பொருட்டல்ல: அவைகள் யாவும் அருவருப்பானவைகளே என்னும் மெய்நிலையாகிய இந்த விழிப்புணர்வைத் தொடர்வதே இக்கண்டுபிடிப்பு. இவ்வாறாகவே ஆவியில் எளிமையுள்ளவன் நரகத்திற்கேயுரிய தன்னுடைய தகுதியற்ற நிலையினை உணர்ந்துகொள்ளுகிறான்.

ஆவியில் எளிமையுடைமை நம்முடைய விசுவாசத்தின் ஒரு மறைமுகமான பாகமாயிருக்கிறது. கிறிஸ்துவின் மாமிசத்தை உண்பதும் அவருடைய பரிசுத்தமான இரத்தத்தைப் பானம் பண்ணுவதுமாகிய (யோவான் 6:48-58) ஆவிக்குரிய வாழ்க்கைக்கேதுவாயிருக்கிற விசுவாசத்தினால் அவரைப் பற்றிக்கொள்ளும் நம்முடைய உறுதிப்பாட்டினை, முற்றிலும் தகுதியற்ற நிலையிலுள்ள நம்முடைய உணர்வுள்ளமானது முந்திக்கொள்ளவேண்டும். தன்னயமான நம்முடைய உள்ளத்தைக் காலி பண்ணுவதும் அங்கே கிறிஸ்துவானவரை நிரமம்புவதும் பரிசுத்த ஆவியானவருடைய வேலையாகும். இவ்வாறாக உன்னதத்திலிருந்து மறுபடியும் பிறக்கிற ஆத்துமாக்களில் குடிகொண்டுள்ள மறைவான அருங்குணத்தை வெளியரங்கமாய் விளங்கப்பண்ணுதற்கு மூலாதாரமாயிருப்பது ஆவியில் எளிமையுடைமை என்னும் இம்முதலாவது பேறுதான். ஆவியில் எளிமையுள்ள மனிதன் அவனுடைய பார்வையில் ஒன்றுமில்லாதவன். தேவனுடைய சந்நிதியிலோ அவர் தூளும் சாம்பலிலுமிருப்பதினையே தனக்குரிய இடமாக மதிக்கிறான். பொய்யான உபதேசத்திலோ அன்றி இவ்வுலகத்தின் ஆசை இச்சைகளினாலோ அவன் தனக்குரிய இடத்தை விட்டுச் சென்றாலும், அவனை மறுபடியும் கொண்டுவருவது எப்படி என்பதனைத் தேவன் அறிவார். தேவன்தாமே தம்முடைய உண்மைக்கும்

அன்பிற்குமேற்ப அதனை நிறைவேற்றுவார். தங்களைத் தாங்களே தாழ்த்துகிற தாழ்மையின் இடமே, தேவனுடைய சந்நிதியில் அவருடைய பிள்ளைகளுக்குரிய ஆசீர்வாதங்களின் உறைவிடமாகும். இவ்வாறு தேவனை மகிமைப்புடுத்துவதற்கேதுவாகிய ஆவியின் எளிமையைப் பரிந்தோம்பிக் கொப்புதற்குரிய வழிமுறையானது மத்தேயு 11:29 வசனத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆவியில் எளிமையுடையவன் இப்பொழுது தனக்கேயுரிய மாம்ச சுபாவத்தின் எதிர்மறையான ஓர் உள்ளப்பாங்கினைக் கொண்டொழுகின்றான். கிருபையின் தெய்வீகமான கிரியை அவனுக்குள்ளே நடைபெறுகிறதென்பதற்குரிய முதன்மையும் ஊறுதியான சாட்சியினை அவன் உடைமையாகக் கொண்டுள்ளான். ஆவியின் எளிமையானது மெய்யான ஆவிக்குரிய வளர்ச்சிக்காகவும் வளப்பத்திற்காகவும் தனக்குப் புறம்பே அவனை நோக்கச் செய்கிறது. அவன் பரலோக இராஜ்யத்தின் சுதந்தரவாளியாயிருக்கிறான். இவ்வாறு ஆவியின் எளிமையைத் தனது உடைமையாக்கிக்கொண்டு வாழ்கிறபடியால், அவனே பாக்கியவான்!

1. முதலாம் பேறு

“ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்:
பரலோகராஜ்யம் அவர்களுடையது”

இம்மலைப் பிரசங்கமானது எவ்வாறு தொடங்குகிறது என்பதனை நோக்குவதும் மெய்யாகவே ஓர் ஆசீர்வாதமாயிருக்கிறது. கொடியவர்கள் மீதுள்ள சாபங்களை அறிவிக்காமல் கிறிஸ்துவானவர் தம்முடைய மக்கள் மீதுள்ள அரும்பேறுகளை அறிவிக்கும் வாயிலாக இம்மலைப்பிரசங்கத்தைத் தொடங்குகிறார். கிறிஸ்து இயேசுவைப்போன்றே அவருடைய சொற்பொழிவும் இருந்தது. ஆக்கினைத்தீர்ப்பானது அவருக்கு ஓர் அந்நிய காரியமாயிருக்கிறது (ஏசா.28:21-22, யோவான் 1:17 வசனத்தோடு ஒப்புநோக்குக). “எளிமையுள்ளவர்கள்- ஆவியில் எளிமையுள்ளவர்கள்- பாக்கியவான்கள்” என்னும் இயேசுவின் வாய்மொழி உலக வழக்கினையும் மீறிய ஒரு விசித்திரமான வாய்மொழியாயிருக்கிறது. ஏழை மக்களைத் தேவனுடைய திருவருட்பேறுடையவர்களாகக் கடந்த காலத்தில் மதித்தவர்கள் எவரேனும் உண்டோ? விசுவாசிகளேயன்றி அவர்களை மதிப்பவர்கள் இன்றும் யாருண்டு? தொடர்ந்து வருகிற கிறிஸ்துவின் போதனைகளுக்கெல்லாம் முகவுரையாகிய இவ்வாய்மொழியே ஒரு மூலச்சொற்றொடாக அமைந்துள்ளது. ஒரு மனிதன் என்ன செய்கிறான் என்பதன்று, அவன் எப்படி இருக்கிறான் என்பதே அதிமுக்கியமானது.

“ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்” ஆவியின் எளிமை என்றால் என்ன? உலகமானது வெகுவாய்ப் புகழ்ந்து பாராட்டுகிற மேட்டிமையும் தன்கொள்கையை நிலைநாட்டுவதுடன் மட்டற்ற தன்னிறைவும் நம்பிக்கையுமுடைய மனப்பான்மைக்கு எதிரிடையாயிருப்பதுவே ஆவியின் எளிமையாகும். தேவனுக்கு தலைவணங்க மறுக்கிற சுயாதீனத்துடன் கூடிய எதிர்ப்பு மனப்பான்மைக்கு இது முற்றிலும் மறுதலையானது. இவ்விதமான எதிர்ப்பு மனப்பான்மையானது துணிகரங்கொள்வதுடன் பார்வோனோடு சேர்ந்துகொண்டு, “கர்த்தருடைய வார்த்தையைக் கேட்கிறதற்கு அவர் யார்? (யாத் 5:2)” என்று சொல்லுகிறது. நான் ஒன்றுமில்லை. என்னுடையது ஒன்றுமில்லை. என்லால் ஆவதும் ஒன்றுமில்லை. என்றுணர்கிற உணர்வு நிலையே ஆவியில் எளிமையுடைமையாகும். தன்னுடைய முழுமையான உதவியற்ற நிலைமயை அறிக்கைபண்ணும் வாயிலாக ஒரு மனிதன் தேவனுடைய சந்நிதியில் புழுதிமட்டும் தாழ்த்துகிற நிலைக்கு வரும்பொழுது ஆவியின் எளிமை தெற்றென விளங்கும். ஓர் ஆத்துமாவிற்குள் நடைபெறுகிற கிருபையின் தெய்வீகமான கிரியையின் முதலாவது அனுபவ அடையாளம் இதுவே. தூரதேசத்தில் குறைபடத்தொடங்கினபோது கெட்டகுமாரனுக்கு நேரிட்ட விழிப்புணர்வு (லூக்கா 15:14) இதற்கு ஒப்பனையாயிருக்கிறது.

2. இரண்டாம் பேறு

“துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் ஆறுதலடைவார்கள்”

மக்களியல்புக்குத் துயரமானது அருவருப்பும் தொந்தரவுமாயிருக்கிறது. நம்முடைய ஆவி துயரங்கள் துக்கங்களாகியவைகளைக் காணும்போது இயல்பாகவே வெறுப்பினால் பின்வாங்குகிறது. அகத்தில் மகிழ்ச்சியும் முகத்தில் மலர்ச்சியுமுடைய மக்களின் சமுதாயத்தையே நாம் பொதுவாக நாடித்தேடுகிறோம். மறுபிறப்பின் அனுபவமில்லாத மக்களுக்கு இந்த வேத வாக்கியமானது ஒரு முரண்பாட்டினை அளிக்கிறது. ஆயினும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்களின் காதுக்கு இன்னிசையமுதாயிருக்கிறது. அவர்கள் பாக்கியவான்களாயின் ஏன் துயரப்படுகிறார்கள்? துயுரப்படுவார்களாயின், அவர்கள் பாக்கியவான்களாயிருப்பது எப்படி? இந்த முரண்பாடு மெய்ந்நிலையின் திறவுகோல் தேவனுடைய பிள்ளைகளிடமே இருக்கிறது. இவ்வேத வாக்கியமோ அவ்வளவாக, “இந்த மனிதன் பேசினதுபோல் ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை” என்று வியந்துரைக்குமாறு நாமும் நெருக்கப்படுகிறோம். துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள் என்பது இவ்வுலக மக்களின் பகுத்தறிவுக்கு முற்றிலும் முரண்படுகிற ஒரு மூதுரையாயிருக்கிறது. எல்லாவிடங்களிலும் எல்லாக் காலங்களிலும் செல்வச் செழிப்பும் மகிழ்சியுமுடையவர்களையே தேவனுடைய

திருவருட்பேறுடைய மக்களால் மதிக்கிறது இவ்வுலகம். ஆயினும் கிறிஸ்துவானவரோ ஆவியில் எளிமையுள்ளவர்களையும் துயரப்படுகிறவர்களையும் தேவனுடைய அருட்பேறுடைய மக்களாக அறிவிக்கிறார்.

எல்லா வகையான துயரங்களும் ஈண்டுக் குறிப்பிடப்படவில்லை என்பது வெளிப்படை. மரணத்திற்கேதுவான இவ்வுலகின் துயரங்கள் உண்டு (2.கொரி.7:10). கிறிஸ்துவானவர் வாக்களித்துள்ள ஆறுதலை தருகிற துயரமோ ஓர் ஆவிக்குரிய துயரமாய் கொள்ளப்படவேண்டும். நம்முடைய சுபாவத்தின் உள்ளார்ந்த சீரழிவையும் நடக்கையிலுள்ள மாபெருங்குற்றத்தையும் வெளிப்படுத்துகிற தேவனுடைய பரிசுத்தமும் அவருடைய தயவும் பற்றிய தெளிவுணர்வின் விளைவுதான் இத்துயரமாகும். தேவனுக்கேற்ற துக்கத்தோடே நம்முடைய பாவங்களைக்குறித்துத் துயரப்படுவதுதான் கிறிஸ்துவானவர் வாக்குப்பண்ணியுள்ள தெய்வீகமான ஆறுதலைத் தருகிற துயரமாயிருக்கிறது.

அருட்பேறுகள் எட்டும் நான்கு இணை துணைக்கூறுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இப்பாடத்தைத் தொடர்ந்து தியானிக்கும்போது அதன் மெய்ந்நிலையானது தெளிவுபடுத்தப்படும். ஆவியில் எளிமையுள்ளவர்களுக்குக் கிறிஸ்துவானவர் அறிவிக்கிற பேறுதான் இவ்வரிசையில் முதலாவது பேறாயிருக்கிறது. தங்களுடைய வறுமையையும் வெறுமையையும் உணருமாறுள்ள விழிப்புணர்வினைப் பெற்ற மக்களைச் சுட்டிக் காண்பிக்கிற ஒரு விளக்கமாகவே நாம் ஆவியின் எளிமையைக் கொள்ள வேண்டும். இத்தகை ஆவிக்குரிய ஏழ்மை நிலையிலிருந்து துயர நிலைக்குக் கடந்து செல்கிற இடப்பெயர்வைப் பின்தொடர்வது இப்பொழுது எளிதாகும். துயரப்படுதலானது ஆவியின் எளிமைக்கு உற்ற துணையாயிருக்கிறபடியால், அது மெய்யாகவே ஆவியின் எளிமையை மிகவும் நெருக்கமாய்ப் பின்தொடர்கிறது. இங்குக் குறிப்பிடப்படுகிற துயரமானது, நம்முடைய உற்றார் உறவினர்களின் மறைவினால் நேரிடும் இழப்புகள், இன்னல்கள், பொருள் நட்டங்கள் ஆகியவைகளினால் உண்டாகும் துயரத்திற்கும் மேம்பட்ட ஒரு துயரமாகும். நம்முடைய பாவத்திற்காகத் துயருறுகிற துயரமே இது.

இது நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் நேரிடுகிற கைவிடப்பட்டுத் தவிக்கிற தனிமைநிலை குறித்தும், தேவனுக்கும் நமக்குமிடையே பிரிவினையை உண்டாக்குகிற அக்கிரமங்களைக் குறித்துமுள்ள துயரமாகும். பெருமை பாராட்டுகிற நம்முடைய நல்லொழுக்கம், நம்பிக்கொண்டிருக்கிற சுய நீதியாகியவைகளைக் குறித்துமுள்ள துயரமுமாம். தேவனுக்கு விரோதமான பகைமையும், அவருடைய சித்தத்திற்கு எதிரிடையான எதிர்ப்புணர்வுங்குறித்துள்ள துயரமுமாம். இத்தகைய துயரமானது, உணரத்தக்க

நிலையிலுள்ள நம்முடைய ஆவியின் எளிமையுடன் எப்பொழுதும் இணைந்தே செல்லுகிறது.

நம்முடைய இரட்சகர் தம்முடைய ஆசீர்வாதங்களை அறிவிப்பதற்கேதுவான ஆவியைச் சுட்டிக்ககாண்பிக்கிற தெளிவான எடுத்துக் காட்டும் அதற்குரிய விளக்கமும் லூக்கா 18:9-14 வசனங்களில் காணப்படுகின்றன. அங்கே தெளிவாய் மாறுபடுகிற ஒரு நிலையினை நாம் காண்கிறோம். தன்னை நீதிமானென்று எண்ணிக்கொண்டிருக்கிற ஒரு பரிசேயன், “தேவனே, நான் பறிகாரன், அநியாயக்காரரார், விபச்சாரக்காரர் ஆகிய மற்ற மனிதரைப்போலவும், இந்த ஆயக்காரனைப்போலவும் இராததினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். வாரத்தில் இரண்டு தரம் உபவாசிக்கிறேன். என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்திவருகிறேன்” என்று தனக்குள்ளே ஜெபம்பண்ணினான். பரிசேயன் சொல்வதெல்லாம் உண்மையே. ஆயினும் அவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்ட நிலையில்தான் வீடு சென்றான். அவனுடைய அழகான உடுப்புகளும் வெண்மையான மேலாடையும் அழுக்கான கந்தைக்கு ஒப்பாகும். அவனோ அதனை அறியவில்லை. பின்னர் ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களை வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு, “பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்” என்றான். சங்கீதக்காரனுடைய வாய்மொழிக்கிணங்க (சங்.40:12) தன் அக்கிரமத்தினால் கலக்கமடைந்த ஆயக்காரன் நிமிர்ந்து பார்க்கவுங்கூடாதிருந்தான். ஆயினும் அவனோ ஆவியில் எளிமையுள்ளவனும் தன் பாவங்களுக்காகத் துக்கப்படுகிறவனுமாயிருந்தபடியால், நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப் போனான்.

ஆனபடியால், தேவனுடைய பிள்ளைகளுடைய மறுபிறப்பின் முதலாவது அடையாளங்கள் இவைகளே. ஆவியின் எளிமை நிலையினை எய்தாமலும், தன் பாவங்களுக்காக மெய்யாய்த் துயரப்படுவதனை ஒருபோதும் அறியாமலுமிருக்கிற ஒருவன், திருச்சபையில் சேர்ந்திருந்தாலும் அங்கே ஆட்சிப் பொறுப்பில் பங்கு பெற்றாலும், பரலோக இராஜ்யத்தைக் காணவோ, அதனுள் பிரவேசிக்கவோ மாட்டான். மகாதேவன் நொறுங்குண்டு பணிந்த இருதயங்களில் வாசம்பண்ணும்படி இறங்கி வருகிறார். ஆகையால் நாம் எத்துணை நன்றியறிவுடையவர்களாயிருக்க வேண்டும். பழைய ஏற்பாட்டின் காலத்திலேயே இது தேவன் நமக்கு அருளியுள்ள ஓர் அற்புதமான வாக்குத்தத்தமாயிருக்கிறது. அவருடைய பார்வையில் வானங்களும் தூய்மையற்றனவாயிருக்கும்போது, மனிதன் கட்டி எழுப்புகிற ஆலயத்தை அது மகிவும் நேர்த்தியாயும், அவர் வாசம்பண்ணுதற்குரிய வீடாயுமிருப்பினும் ஏற்றுக்கொள்ளமாட்டார். ஆயினும் சிறுமைப்பட்டு, ஆவியில் நொறுங்குண்டு, தன் வசனத்துக்கு நடுங்கிறவனையே அவர் நோக்கிப் பார்ப்பார். ஏசாயா 57:15, 66:1-2 வசனங்களைப் பார்க்க.

“துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்” பாவ உணர்வின் விளைவாக முதலாவது ஏற்படுகிற துயரமே இங்கு முதன்மையாய்க் குறிப்பிடப்பட்டாலும், துயரப்படுதல் அத்துடன் நின்று விடவில்லை. துயரப்படுதல் என்பது கிறிஸ்தவ வாழ்க்கையில் எந்நாளும் நிரந்தரமாய்க் காணப்படுகிற ஒரு தனிச்சிறப்புடைய பண்பு நிலையாயிருக்கிறது. துயரப்படுதற்கேதுவாக விசுவாசிக்கு எவ்வளவோ இருக்கிறது. “நிர்ப்பந்தமான மனிதன் நான்” (ரோமர் 7:24) என்று அவனுடைய இருதயத்திலுள்ள பொல்லாப்புகள் அவனைக் கதறியழப்பண்ணுகிறது. நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற (எபி.12:1) அவிசுவாசமும், நம்முடைய தலையின் மயிர்களிலும் அதிகமாய்ச் செய்கிற எண்ணிறந்த பாவங்களும் இடையறாத் துயரத்தைத் தருகின்றன. நம்முடைய வாழ்க்கையில் காணப்படுகிற வெறுமையும், பயனின்மையும், நம்மைத் துக்கித்து அழப்பண்ணுகின்றன. கிறிஸ்துவை விட்டுச் சுற்றித்திரிகிற நம்முடைய மனப்போக்கு, அவரோடு உறவு பாராட்டும் நிலையிலுள்ள நம்முடைய குறைபாடு, அவர் பாலுள்ள நம்முடைய அன்பின் ஆழமில்லாமையாகியவை நம்முடைய வீணைகளையும் இன்னிசைக் கருவிகளையும் பயன்படுத்தாமல் அலரிச்செடிகளின் மேல் வைத்துவிடுமளவுக்கு நம்மை நடத்துகின்றன.

இவைகளையெல்லாம் கிறிஸ்தவ உள்ளங்களை அலைக்கழிக்கிற துயரத்திற்கேதுவாகப் பல்வேறு காரியங்கள் உள்ளன. தேவ பக்தியின் வேடத்தைத் தரித்துக்கொண்டு அதன் பெலனை மறுதலிக்கிற மார்க்கம், எண்ணிறந்த பிரசங்க பீடங்களில் பொய்யான உபதேசங்களைப் போதித்து அதன் வாயிலாகத் தேவனுடைய சத்தியமானது பயங்கரமாய்க் கனவீனப்படுத்தப்படுதல், கர்த்தருடைய பிள்ளைகளிடையே நிலவுகிற பிரிவினைகள், சகோதரர்களிடையேயுள்ள பூசல்கள் முதலியன கிறிஸ்தவ உள்ளங்களை அலைக்கழிக்கிற துயரங்களாகும். இவைகள் யாவும் நம்முடைய இருதயங்களில் இடையறாத் துக்கத்தையும் வேதனையையும் அளக்கின்றன. பொல்லாப்பு நிறைந்த பயங்கரமான உலகநிலை, கிறிஸ்துவை அசட்டைபண்ணுதல், மனுமக்களின் சொல்லிமுடியாத இன்னல்கள் முதலியன நமக்குள்ளே பெருமூச்சையுண்டாக்குகின்றன. தேவனோடு ஒரு கிறிஸ்தவன் எவ்வளவு அதிகமாய் நெருங்கி வாழுகின்றானோ, அவரைக் கனவீனம்பண்ணுகிற மக்களை காணும்போது அவ்வளவு அதிகமாய் அவன் துயரமடைகிறான். உண்மையான தேவப்பிள்ளைகளின் பொதுவான அனுபவம் இதுவே. (சங்.119:53, எரே.13:17, 14:17, எசேக்.9:4).

“அவர்கள் ஆறுதலடைவார்கள்” இந்தச் சொற்றொடரின் வாயிலாக நமது மனட்சாட்சியைப் பாரப்படுத்துகிற குற்றமானது முதலாவதாக அகற்றப்படுவதைக் கிறிஸ்துவானவர் குறிப்பிடுகிறார். இதனைப் பரிசுத்த ஆவியானவர்தாமே

தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பயன்படுத்தி நிறைவேற்றுகிறார். அவர் எவனோடு இடைப்படுகிறாரோ அவனுக்கு ஓர் இரட்சகரின் அவசரத் தேவையை உணர்த்தி அதன் வாயிலாக இதனை நிறைவேற்றுகிறார். கிறிஸ்து இயேசுவின் பாவப் பரிகாரமாகிய இரத்தத்தின் புண்ணியத்தினால் உண்டாகிற இலவசமும் நிறைவுடையதுமான பாவமன்னிப்பின் உணர்வே இதன் முடிவான பலனாகும். இத்தெய்வீக ஆறுதலானது “எல்லாப்புத்திக்கும் மேலான தேவ சமாதானமாயிருக்கிறது” (பிலி.4:7). இவ்வாறு பிரியமானவருக்குள் ஏற்றுக்கொள்ளப்பட்ட இவ்வாறு பிரியமானவர்க்குள் ஏற்றுக்கொள்ளப்பட்ட (எபேசி.1:5) நிச்சயமுள்ளவர்களுடைய இருதயங்களை இத் தேவ சமாதானமானது நிரப்புகிறது. தேவன் முதலில் காயப்படுத்திப் பின்னர் புண்ணை ஆற்றுகிறார். முதற்கண்தாழ்த்தி, பின்னரே அவர் உயர்த்துகிறார். முதலாவது தேவனுடைய நீதியும் பரிசுத்தமும் வெளிப்படுத்தப்படும். பிறகுதான் அவருடைய கிருபையும் இரக்கமும் அறிவிக்கப்படும்.

“அவர்கள் ஆறுதலடைவார்கள்” என்னும் வாய்மொழியானது கிறிஸ்தவ வாழ்க்கையில் தொடர்ந்து அனுபவிக்குமாறுள்ள ஒரு நிரந்தரமான நிறைவேறுதலுமாகும். ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய மன்னிக்கப்படாத தவறுகளைக் குறித்துத் துக்கித்து, தேவனிடம் அறிக்கைபண்ணும்போது, தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தமானது எல்லாப் பாவங்களையும் நீக்கி அவனைச் சுத்திகரிக்கிறது (1.யோ.1:7) என்னும் நிச்சயத்தினால், அவன் ஆறுதலடைகிறான். எப்பக்கதிலும் தேவன் கனவீனம் பண்ணப்படும்போது அவன் துக்கத்தோடு பெருமூச்சுவிடுவானாயினும், சாத்தானானவன் சீக்கிரத்தில் நரகத்தில் என்றென்றுமாய்த் தள்ளப்படுவதோடு, நீதி வாசமாயிருக்கிற புதிய வானிலும் புதிய பூமியிலும் (2.பேதுரு 3:13) கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பரிசுத்தவான்களுடன் ஆளுகைசெய்கிற நாள் வேகமாய் நெருங்கி வந்துகொண்டிருப்பதனைக் குறித்துள்ள அறிவினால் அவன் ஆறுதல் அடைகிறான். கர்த்தடைய சிட்சிக்கும் கரமானது அவன் மீது அடிக்கடி வைக்கப்படினும், அந்தச் சிட்டையானது தற்காலத்தில் மகிழ்ச்சியின்றித் துக்கமாய்க் காணப்படினும் (எபி.12:11) மகிவும் அதிகமான நித்திய கன மகிமையை உண்டாக்குகிறது (2.கொரி.4:17) என்று அறிந்துள்ள அவனுடைய அறிவினால் ஆறுதலடைகிறான்.

தேவனோடு உறவாடுகிற விசுவாசியானவன் அப்போஸ்தலனாகிய பவுலைப்போல், துக்கப்படுகிறவன் என்னப்பட்டாலும், எப்பொழுதும் மகிழ்ச்சியுடனிருக்கிறான் (2.கொரி.6:10) மாராவின் கசப்பான தண்ணீரை அவன் அடிக்கடி பருக நேரிடினும், அவனுடைய கசப்பினை மதுரமாக்கும் மரத்தை அந்த நீர்நிலையின் அருகில் தேவன் நாட்டியுள்ளார். ஆம் துயரப்படுகிற கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியானவராகிய தெய்வீகமான தேற்றரவாளனால்

இப்பொழுதும் ஆறுதலடைகிறார்கள். தேவ ஊழியர்களுடைய ஊழியத்தினாலும் தங்களுடனுள்ள உடன் கிறிஸ்தவ சகோதரர்களின் ஆறுதல் மொழியினாலும் அவர்கள் ஆறுதலடைகிறார்கள். இவைகளில்லா, நிலையிலும் தேவனுடைய ஆவியானவர் அவர்களுடைய உள்ளக் களஞ்சியத்தில் சேகரித்து வைத்துள்ள விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களை அவர்களுடைய நினைவிற்கொண்டுவருவார். அவைகள் அவர்களுக்கு ஆறுதல் அளிக்கின்றன.

"அவர்கள் ஆறுதலடைவார்கள்" நேர்த்தியான நல்ல திராட்ச ரசமானது இறுதியில் பரிமாறப்படுதற்காகத் தனியே சேகரித்து வைக்கப்பட்டுள்ளது. "சாயங்காலத்தில் அழுகை தங்கும். விடியற்காலத்திலே களிப்புண்டாகும்" (சங். 30:5). கர்த்தருடைய சமுகமானது காணப்படாத நீண்ட இராக்காலங்களில், துக்கம் நிறைந்தவராயிருந்த கிறிஸ்து இயேசுவுடன் ஐக்கியம் பாராட்டுமாறு விசுவாசிகள் அழைக்கப்பட்டுள்ளார்கள். கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு, அவருடனேகூட பாடுபட்டால் அப்படியாகும்" (ரோமர் 8:17) என்று வேதவாக்கியம் உரைக்கிறது. மேகமந்தாரமில்லாத காலைவேளை வரும் போது, நமக்கு உண்டாகிற ஆறுதலும் மகிழ்ச்சியும் எவ்வளவு! அப்பொழுது நம்முடைய சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம் (ஏசாயா 35:10). அப்பொழுது வெளிப்படுத்தல் 21:3.4 வசனங்களிலுள்ள பெருஞ் சத்தத்தின் வார்த்தைகள் நிறைவேறக் காண்போம்.

"இதோ, மனிதர்களிடத்தில் தேவனுடைய வாசஸ்தலம் இருக்கிறது. அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார். அவர்களும் அவருடைய ஜனமாயிருப்பார்கள். தேவன் தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார். இனி மரணமுமில்லை. முந்தினவைகள் ஒழிந்துபோயின.

3. மூன்றாம் பேறு

"சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்.
அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்வார்கள்"

சாந்தம் என்னும் சொல்லின் சிறப்புடைமை குறித்துப் பல்வேறு கருத்து வேறுபாடுகள் உள்ளன. இதனைச் சிலர் பொறுமை என்றும் அமைதியடக்கத்தின் ஆவி என்றும் பொருள்கொள்ளுகின்றனர். தன்னலமின்மையும், தன்னைத் தானே மறுதலித்தலுமாகிய அருங்குணம் என்பர் வேறு சிலர். தயவுடன் மற்றவர்களால் உண்டாகும் இன்னல்களைச் சகித்துக்கொண்டு பதிலுக்குப் பதில் செய்யாதிருக்கிற ஆவியே சாந்தமாகும் என்பர் இன்னும் சிலர். இவ்விளக்கங்களில் சாந்தம் என்னும் சொல்லின் பொருள்பயன் ஓரளவு தொனிப்பது மெய்தான். அதில் ஐயமில்லை. ஆயினும் மூன்றாவது

அருட்பேறாகிய இதனை முறைப்படி நோக்குமிடத்து மேற்காணும் பொருள்கோளின் கண்ணே ஆழமில்லாதிருப்பது தெளிவாகப் புலப்படும். பொதுவாக நாம் சாந்தத்தினை மனத்தாழ்மையுடன் இணைத்து பொருள் விளக்கம் அளிக்கிறோம். சாந்தகுணமுள்ளவர்கள் அதாவது மனத்தாழ்மையுள்ளவர்கள் பாக்கியவான்கள். இப்பொருள் விளக்கத்திற்கு ஆதாரமாக ஒப்புடைய வேத வாக்கியங்களை நோக்குவோம்.

நம்முடைய வேதாகமத்தில் சாந்தம் என்னும் சொல்லானது முதன்முறைவாக எண்ணாகமம் 12:3 வசனத்தில்தான் காணப்படுகிறது. இந்த வசனத்தின் முன்னே காணப்படுகிற வேதவாக்கியங்களிலுள்ள முரண்பாட்டினைத் தேவனுடைய ஆவியானவர் நமக்குச் சுட்டிக்காண்பிக்கிறார். அங்கே மீரியாமும் ஆரோனும் மோசேக்கு விரோதமாய்ப் பேசி, “கர்த்தர் மோசேயைக் கொண்டு மாத்திரம் பேசினாரோ, எங்களைக்கொண்டும் அவர் பேசினதில்லையோ?” என்று சொன்னார்கள். மேலும் மீரியாம், ஆரோன் ஆகியவர்களுடைய பெருமை, மனமேட்டிமை, தன்நல நாட்டம், பதவிமோகம் முதலான கேடுகளை அவர்களுடைய வாய்மொழியே வெளிப்படுத்துகிறது. அவர்களுக்கு முற்றிலும் மாறாக மோசேயோ மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தானென்று நாம் வாசிக்கிறோம். ஆகவே தன்னுடைய தமையன், தமக்கையாகியவர்களிடம் குடிகொண்டிருந்த ஆவிக்கு முற்றிலும் மாறுபட்ட ஓர் ஆவியினால் மோசே இயக்கப்பட்டானென்றுதானே நாம் பொருள்கொள்ளவேண்டும்.

மனத்தாழ்மை,, பணிவுடைமை, தன்னலத்துறவு ஆகிய அருங்குணங்களுடன் திகழ்ந்தான் மோசே. எபிரெயர் 11:24-26 வசனங்களில் இவ்வருங்குணங்கள் நம்முடைய பாராட்டுதலுக்கும் போதனைக்குமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்வுலகத்தின் பாராட்டுதலுக்கும், பூமிக்குரிய செல்வங்களுக்கும் புறமுதுகுகாட்டி, அரச வாழ்வைத் துறந்து, அந்நியனும் பரதேசியுமாய் வாழ்கிற வாழ்க்கையைத் தெரிந்துகொண்டான். யேகோவாகிய தேவன் மீதியானியருடைய நாட்டில் மோசேக்கு முதன்முறையாகத் தரிசனமாகி, தம்முடைய ஜனங்களை எகிப்தினின்றும் நடத்திச் செல்லும்படி அவனுக்குக் கட்டளையிட்டபோதும், அவனுடைய மனத்தாழ்மையை நாம் மீண்டும் காணலாகும். “பார்வோனிடத்துக்குப் போகவும், இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து அழைத்துவரவும் நான் எம்மாத்திரம்” என்றான் மோசே (யாத்.3:11) என்னே இவ்வாய்மொழி உணர்த்துகிற மோசேயின் மனத்தாழ்மை! மிகவும் சாந்தமுள்ளவன் மோசே.

மேற்காணும் சாந்தத்திற்குரிய சொற்பொருள் விளக்கத்தினையே ஏனைய வேதவாக்கியங்களும் அறிவுறுத்துகின்றன. இத்தகைய விளக்கமே தேவையாயிருக்குறிது. “சாந்தகுணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்தி,

சாந்தகுணமுள்ளவர்களுக்குத் தமது வழியைப் போதிக்கிறார்" (சங்.25:9). தேவன் தாமே போதித்து ஆலோசனை சொல்லும்படி சாந்தமும் மனத்தாழ்மையுமுள்ள மக்களுக்கு வாக்குப்பண்ணியுள்ளாரென்று பொருள்கொள்வதல்லாமல், இவ் வேத வாக்கியத்திற்கு வேறு பொருளுமுண்டோ? "இதோ, உன் ராஜா சாந்தகுணமுள்ளவராய் கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறிக்கொண்டு உன்னிடத்தில் வருகிறார்" (மத்.21:5). சாந்தம், மனத்தாழ்மை ஆகிய அருங்குணங்களின் அவதாரத்தினையே நாம் இங்குக் காண்கிறோம். "சகோதரரே, ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர்பொருந்தப்பண்ண வேண்டும். நீயும் சோதிக்கப்படாதபடிக்கு உன்னைக் குறித்து எச்சரிக்கையாயிரு" (கலா.6:1). தவறுகிற ஒரு சகோதரனைச் சீர்பொருந்தப்பண்ணும்படி தேவன் பயன்படுத்துகிற ஒருவனுக்கும் பெரிதும் வேண்டற்பாலது சாந்தமுள்ள ஆவிதான் என்பது இதனால் விளங்குகிறதல்லவா? சாந்தமும் மனத்தாழ்மையுள்ளவராகிய இயேசுவிடமிருந்தே நாம் கற்றுக்கொள்ள வேண்டும். "சாந்தமும் மனத்தாழ்மையும்" என்னும் சொற்றொடரில் பின்னருள்ள மனத்தாழ்மையையே முன்னருள்ள சாந்தத்தின் வளக்குமாகும். எபேசியர் 4:2 வசனத்தில் மனத்தாழ்மையும் சாந்தமும்" என்னும் முறைமையின்படி மீண்டும் இணைந்து காட்சியளித்தல் காண்க. மத்.11:29 வசனத்திலுள்ள முறைமையின்னை இடம் மாற்றி இங்கு உரைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இச்சொற்றொடரிலுள்ள இரண்டு சொற்களும் ஒரு பொருட்பன்மொழியாயிருப்பதனையே இது நமக்குச் சுட்டிக்காண்பிக்கிறது.

வேதாகமத்தில் சாந்தம் என்னும் சொல்லானது பணிவுடைமையும் மனத்தாழ்மையையும் குறிப்பிடுகிறது என்பதனை வேத வாக்கியங்களின் வாயிலாக நாம் இதுகாறும் நிலைநாட்ட முயன்றோம். இப்பொழுது இத்தகைய சாந்தமானது சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ப எவ்வண்ணமாய்த் தோற்றமளிக்கிறது என்பதனை நோக்குவோம். பட்டறிவினால் ஆத்துமாவில் உணரத்தக்கவாறு, கிருபையினால் உண்டாகிற தேவனுடைய செயலின் முறையான வளர்ச்சியினை, நம்முடைய கர்த்தர் இத்திருவருட்பேறுகளில் விளக்கி உரைக்கிறாரென்பதை நாம் எப்பொழுதும் உள்ளத்தில் கொள்ளவேண்டும். முதலாவதாக, ஆவியில் எளிமை அதாவது நம்முடைய போதாமை, ஒன்றுமில்லா நிலைமையாகியவைகளை உணருகிற உணர்வு ஆகும். அடுத்தபடியாக, நம்முடைய காணமற்போன நிலைமையையும் தேவனுக்கு விரோதமான நம்முடைய பாவங்களையும் பற்றிய துயர நிலையாகும். ஆவிக்குரிய அனுபவத்தின் ஒழுங்குமுறையில், இதனை தொடர்வதுதான் ஆத்துமாவின் தாழ்மை நிலையாகும்.

ஒருவனுடைய ஒன்றுமில்லாமையையும் சிறுமையையும் உணரத்தக்கவண்ணம் தேவனுடைய ஆவியானவர் செயலாற்றும்பொழுது, அவன் தேவனுடைய சமுகத்தில் தூளிலும் சாம்பலிலும் இருக்கிற நிலைக்குள் கொண்டுவரப்படுகிறான். சுவிசேஷ ஊழியத்தில் தேவன் தம் கரங்களில் எடுத்துப் பயன்படுத்துகிற ஒருவனைக்குறித்துப் பேசும்போது, அப்போஸ்தலனாகிய பவுல், “எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்திற்கேற்றவைகளாயிராமல் தேவபலமுள்ளவைகளாயிருக்கின்றன. அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவிற்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயுமிருக்கிறோம்” (2.கொரி. 10:4-5) என்று சொல்லுகிறார். அப்போஸ்தலன் ஈண்டுப் பயன்படுத்துகிற போராயுதங்கள், தேடிக் கண்டுபிடித்து, ஆக்கினைக்குள்ளாக்கி, தாழ்த்திக் கீழ்ப்படியுமாறு செய்கிற வேத வாக்கியங்களாகிய சத்தியங்களேயாகும். தேவ ஆவியானவரால் வல்லமையாய்ப் பயன்படுத்தப்படுகிற இந்த வேதவாக்கியங்கள் எல்லா அரண்களையும் நிர்மூலமாக்கத்தக்க வல்லமையுள்ள போராயுதங்களாயிருக்கின்றன. அதாவது பாவத்தில் உழல்கிற மக்கள் அடைக்கலமாகக் கொண்டுள்ள அவர்களுடைய எல்லாவிதமான தப்பெண்ணங்களையும், தம்மைத் தாமே நீதிகரித்துக்கொள்ளுகிற அவர்களுடைய தற்காப்பினையும் வேதவாக்கியங்களாகிய போராயுதங்கள் நிர்மூலமாக்குகின்றன. இவ்மெய்ந்நிலை விளைவுகள் மாறாதவை. இன்னும் நடைமுறை வாழ்க்கையில் காணலாகும். மேட்டிமையான சிந்தனைகள், தர்க்கங்கள், மாம்ச சிந்தையிலுள்ள பகைமை, இரட்சிப்பைப் குறித்து புதிதாய் மறுபடியும் பிறந்த உள்ளங்களில் எழுகிற எதிர்ப்பு முதலானவைகள் கிறிஸ்துவுக்குள் கீழ்ப்படியுமாறு இப்பொழுதும் சிறையாக்கப்படுகின்றன.

பொதுவாகப் பாவிகள் எல்லாரும் தனித்தனியே ஒவ்வொருவரும் நியாயப்பிரமாணக் கிரியைகளினால் தங்களை நீதிமான்களாக்கிக்கொள்ளுகிற பரிசேயர்களுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். நம்முடைய நிர்வாணத்தையும் அவமானத்தையும் மூடிக்கொள்ளுமாறு நாமே நமக்கு ஒரு போர்வையை உண்டாக்கிக் கொள்ளுகிற மனப்பான்மையை நாம் நம்முடைய ஆதி பிதாக்களிடமிருந்துச் சுதந்தரித்துக்கொண்டிருக்கிறோம். மனுக்குலத்தில் தோன்றிய மக்களாகிய நாமனைவரும் நிலத்தில் நம்முடைய உழைப்பின் பயனாகிய விளைபொருள்களைக் காணிக்கையாய்த் தேவனுக்குச் செலுத்த முற்பட்ட காயீன் வழியில் நடக்கிறோம். அதாவது நாம் ஈட்டிய புண்ணியத்தினை ஆதாரமாகக்கொண்டு தேவனுடைய சமுகத்தில் நிற்குமாறுள்ள ஒரு நிலையை விரும்புகிறோம். நம்முடைய நற்செயல்களினால் தேவனுடைய இரட்சிப்பை விலைக்கு வாங்க முற்படுகிறோம். அவ்வண்ணமே பரலோகத்தைச் சுதந்தரித்துக்கொள்ளவும் வாஞ்சிக்கிறோம். ஆயினும் தேவனுடைய இரட்சிப்பின்

வழியோ மாம்ச சிந்தையானது கற்றுக்கொள்ள முடியாதளவுக்கு நம்மை நாமே தாழ்த்துகிற தாழ்மையின் வழியாயிருக்கிறது. இத்தாழ்மையின் வழியானது தற்புகழ்ச்சிக்கும் பெருமைக்கும் ஆதாரமான அடித்தளத்தினை அகற்றி அப்புறப்படுத்துகிறது. ஆகையால், தேவனுடைய இரட்சிப்பானது மறுபிறப்படையாத மேட்டிமையான உள்ளங்களால் ஏற்றுக்கொள்ளப்படமுடியாது. தன்னுடைய இரட்சிப்பில் தன்னுடைய புண்ணியச்செயல்களுக்கும் இடம் வேண்டுமென விரும்புகிறான் மனிதன். "எதையும் தேவன் அவனிடமிருந்து ஏற்றுக்கொள்ள மாட்டார். இரட்சிப்பு தெய்வீகமான இரக்கத்தினால் மாத்திரம் உண்டாகிற பொருள். தேவனது அன்பின் ஈவாகப் பெற்றுக்கொள்ளும்படி வெறுங்கையோடு வருகிறவர்களுக்கே நித்திய வாழ்வுண்டு" என்று சொல்லுவோமாயின், அது சுயநீதியைச் சார்ந்தொழுகும் மார்க்கத்தார்க்கு வெறுப்புண்டாக்குகிறது. ஆயினும் ஆவியில் எளிமையுள்ளவர்களுக்கும், தங்களுடைய கேடும் நிர்ப்பந்தமுமான நிலைமையைக்குறித்து துயருறுவார்க்கும் அவ்வாறன்று. தேவ இரக்கம் என்னும் சொல்லானது அவர்களின் காதுகளில் இன்னிசைக் கீதமாய் ஒலிக்கிறது. இலவசமான ஈவாகிய தேவனுடைய நித்திய வாழ்க்கையானது அவர்களுடைய ஏழ்மை நிலைக்கு ஏற்புடையதாயிருக்கிறது. எப்படியாவது பெற்றுக்கொள்ள வேண்டுமென அவர்கள் விரும்புவதெல்லாம், நரகத்துக்குரியவர்களாகிய தமக்குத் தேவன் அருளுகிற தன்னேரில்லாத தயவு அதாவது அவருடைய கிருபைதான்! அத்தகையோருடைய உள்ளங்களில் தங்களை நீதிகரித்துக்கொள்ள வேண்டுமென்று எண்ணுகிற சிந்தனைக்கு இடமில்லை. தேவனுடைய தயவுள்ள ஈவுக்கு விரோதமாகவுள்ள அவர்களுடைய எல்லா இறுமாப்புடைய எதிர்ப்புகளும் ஓசைபடாது ஓடுங்கின. தங்களைப் பிச்சைக்காரர்களாக மதித்து அந்நிலையில் மகிழ்ச்சியுடன் அவர்கள் தேவனுடைய சமுகத்தில் தங்களைத் தூளிலும் சாம்பலிலும் தாழ்த்துகிறார்கள். தேவனுடைய ஊழியக்காரன் விதித்த தாழ்மையின் நிபந்தனைகளை நாகமான் முதல் எதிர்த்தார். அவனைப்போலவே அவர்களும் முதற்கண் எதிர்த்தார்கள்தான். ஆயினும் நாகமானைப்போலவே அவர்களும் மேட்டிமை என்னும் தங்கள் இரதங்களைவிட்டு இறங்கிவந்து, தேவனுக்கு முன்பாக இப்பொழுதே தூளிலும் சாம்பலிலும் அமர்ந்திருக்கிறார்கள்.

நாகமான் தன்னைத் தாழ்த்தி, தேவனுடைய ஊழியக்காரன் சொல்லிய வார்த்தையைப் பணிவோடு ஏற்றுக்கொண்டபோது, தன் குஷ்டரோகத்தினின்றும் முற்றுமாய்க் குணமாக்கப்பட்டான். அவ்வண்ணமே பாவியானவன் தன் சிறுமை நிலையை உணர்ந்து ஒப்புக்கொள்ளும் போது தேவதயவு அவன் முன்னர்க் காட்சியளிக்கிறது. "சாந்தகுணமுள்ளவன் பாக்கியவான்" என்னும் அருட்பேற்றினை அவனே பெற்றுக்கொள்ளுகிறான். ஏசாயாவின் வாயினால் மிகுந்த ஆவலோடும் எதிர்பார்ப்பபோடும் பேசுகிற நம்முடைய இரட்சகர், "சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்க கர்த்தர் என்னை

அபிஷேகம் பண்ணினார்” (ஏசா.61:1) என்று கூறியுள்ளார். மேலும், “கர்த்தர் தம்முடைய ஜனத்தின்மேல் பிரியம் வைக்கிறார். சாந்த குணமுள்ளவர்களை இரட்சிப்பினால் அலங்கரிப்பார்” (சங்.149:4) என்றும் எழுதப்பட்டுள்ளது.

இரட்சிப்பைக் குறித்துள்ள தேவனுடைய வழிமுறைக்குக் கீழ்ப்படிகிற ஆத்துமாவின் தாழ்மையே இம்மூன்றாவது அருட்பேற்றின் முதன்மையான பொருட்பயனாயிருப்பினும், அதன் பயன்படும் தன்மையை அத்துடன் அடக்கிக் கட்டுப்படுத்தப்கூடாது. பச்சிளங் காயானது முதிர்ந்து சுவை மிகுந்த தீங்கனியாய் மாறுவதுபோலவே சாந்தமானது உள்ளுயிர்ப்பாகமாய்க் கிறிஸ்தவனுக்குள்ளும் அவன் வாயிலாகவும் விளைந்து முற்றிப்பழுத்த ஆவியின் கனியாயுமிருக்கிறது (கலா.5:22-23). சிட்சைகளும் பாடுகளுமாகிய தேவனுடைய பள்ளியில் பயில்கிறவர்களும், அவருடைய சித்தத்திற்குள் இனிதே அடங்கி அமைதியுடன் வாழ்கிறவர்களுமாகிய பெருமக்களிடம் காணப்படுகிற ஆவியின் அருங்குணமே இச்சாந்தமாகும். இச்சாந்தமானது ஆளுகைசெய்யும்போது, நிந்தைகளையும் பாடுகளையும் பொறுமையோடே சகித்துக்கொள்ளுமாறு விசுவாசியானவனிடத்திலுள்ள தேவ கிருபை அவனைத் தாங்குகிறது. பரிசுத்தவான்களில் மிகவும் சிறியவர்களாலும் போதிக்கப்படவும் கடிந்துகொள்ளப்படவும் அவனை அக்கிருபையே ஆயத்தமாக்குகிறது. மற்றவர்களைத் தன்னிலும் மேலானவர்களாய் மதிக்கிற மனநிலைக்குள் அவனை அக்கிருபையே நடத்துகிறது (பிலி.2:3). மேலும் அவனிடம் காணப்படுகிற நம்மைகள் யாவற்றிற்கும் உன்னதமான தேவனுடைய கிருபையே முதற்காரணமாகுமென்று சொல்லி அறிக்கையிடுமாறு அக்கிருபையே அவனுக்குப் போதிக்கிறது.

இதற்கு மாறாக, மெய்யான சாந்தகுணமானது பெலவீனமன்று. இதனை மெய்ப்பித்துக் காண்பிக்கிற சிறப்புக்குரிய நிகழ்ச்சியினை அப்போஸ்தலர் 16:35-37 வசனங்களில் காணலாகும். அப்போஸ்தலர்களின் நேர்மையின்றித் தவறான முறைமையின்படி அடிக்கப்பட்டுச் சிறையில் தள்ளப்பட்டார்கள். மறுநாளில் அவர்களை விடுவிக்கும்படி அதிகாரிகள் ஆணை பிறப்பித்தார்கள். ஆயினும் சேவகர்களிடம் பவுல், “அவர்களே வந்து எங்களை வெளியே அழைத்து அனுப்பி விடட்டும்” என்று சொன்னான். தேவன் அருளும் சாந்தகுணமானது தேவன் அருளிய உரிமைகளைப் பாதுகாக்கும்படி எழுந்து நிற்கும். பிரதான ஆசாரியனுடைய அதிகாரிகளில் ஒருவன் இயேசுவை ஓர் அறை அறைந்தபோது, “நான் தகாதவிதமாய்ப் பேசினதுண்டானால் தகாததை ஒப்புவி, நான் தகுதியாய்ப் பேசினதுண்டானால் தகாததை ஒப்புவி. நான் தகுதியாய்ப் பேசினேனேயாகில் என்னை ஏன் அடிக்கிறாய்?” என்று கேட்டார் இயேசு (யோ.18:23).

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சாந்தமும் மனத்தாழ்மையுமாயிருந்தார். அவர் மாத்திரமே சாந்தமுள்ள ஆவியின் மெய்யான தன்மையினைத் தக்க சான்றுகளின் வாயிலாக விளக்கிக் காண்பித்தார். ஆயினும் அவருடைய பிள்ளைகளிடமோ இந்நலமிக்க ஆவியானது ஊசலாடுகிறது. மாமிசத்தின் எழுச்சியின் காரணமாகப் பற்பல வேளைகளில் மறைக்கப்படுகிறது. மோசேயைக் குறித்து, “அவர்கள் அவன் ஆவியை விசனப்படுத்தினதினாலே, தன் உதடுகளினாலே பதறிப் பேசினான்” (சங்.106:33) என்று சொல்லப்பட்டுள்ளது. எசேக்கியேல் தன்னைக்குறித்து, “நான் என் ஆவியின் உக்கிரத்தினாலே மனங்கசந்து போனேன். ஆனாலும் கர்த்தருடைய கரம் என்மேல் பலமாக இருந்தது” (எசேக்.3:14) என்று சொல்லுகிறான். யோனாவைக் குறித்து அவனுடைய அதிசயமான விடுதலைக்குப் பின்னர், இது அவனுக்கு மிகவும் விசனமாயிருந்தது. அவனுக்குள் கோபங்கொண்டான் (யோனா 4:1) என்று நாம் வாசிக்கிறோம். சாந்தமுள்ள பர்னபாவும் கடுங்கோபங்கொண்டு பவுலை விட்டுப் பிரிந்தார் (அப். 15:37-39) இவைகளெல்லாம் நமக்கு எச்சரிப்புகளாயிருக்கின்றன! பாருங்கள்! கிறிஸ்துவிடமிருந்து எவ்வளவு அதிகமாக நாம் கற்றுக்கொள்ளவேண்டியவர்களாயிருக்கிறோம்!

“சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்வார்கள்” சங்.37:11 வசனத்தைப் பயன்படுத்தி அதன் பொருளை நம்முடைய கர்த்தர் மறைமுகமாய்க் குறிப்பிடுகிறார். “சாந்தகுணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்து, மிகுந்த சமாதானத்தினால் மனமகிழ்ச்சியாயிருப்பார்கள்” இவ்வாக்குத்தத்தமானது எழுத்தின்படியும் ஆவிக்குரிய பொருளின்படியும் இருவகையான நன்மைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இம்மைக்கண் நலமானவற்றை மிகப்பெரிய அளவாக அனுபவிப்பார்கள் சாந்தகுணமுள்ளவர்களேயாவர். பேராசையும் பிறன் பொருள் கவரும் பொருளாசையுமாகிய கொடிய ஆவியினின்றும் விடுதலைபெற்று, உள்ளதுகொண்டு மனநிறைவு பெற்றுள்ளனர். “அநேக துன்மார்க்கருக்குள்ள செல்வத்திரட்சியைப் பார்க்கிலும், நீதிமானுக்குள்ள கொஞ்சமே நல்லது” (சங்.37:16). போதுமென்னும் மனநிறைவு சாந்தமுள்ள ஆவியின் கனிகளில் ஒன்றாகும். ஏராளமான நிலபுலங்களை உடையவர்களாயினும், மேட்டிமையான சிந்தையுடன் அமைதியின்றி வாழுகிற மக்களோ இப்பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளமாட்டார்கள். அரண்மனையில் வாழும் கொடுங்கோலனைக்காட்டிலும் குடிசையில் வாழுகிற எளிமையுள்ளம் படைத்த கிறிஸ்தவனே பேரின்பம் துய்க்கிறான். “சஞ்சலத்தோடுகூடிய அதிகப் பொருளிலும், கர்த்தரைப் பற்றும் பயத்துடன் கூடிய கொஞ்சப்பொருளே உத்தமம்” (நீதி.15:16).

“சாந்தகுணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்வார்கள்” நாம் பாரத்தவண்ணமே இம்மூன்றாவது அருட்பேறானது சங்கீதம் 37:11 வசனத்தை குறிப்பாய் உணர்த்துகிற ஒரு மேற்கோளாயிருக்கிறது. புதிய ஏற்பாட்டின் சத்தியத்தை வெளிப்படுத்தும்படி நம்முடைய கர்த்தர் பழைய ஏற்பாட்டின் வாசகத்தைப் பயன்படுத்துகிறார். மேலும் யோவான் 6:50-58 வசனத்திலுள்ள தண்ணீரும் இரத்தமும், யோவான் 3:5 வசனத்திலுள்ளு தண்ணீரும் உன்னதத்திலிருந்து மறுபடியும் பிறந்தவர்களுக்கு ஓர் ஆவிக்குரிய மெய்ப்பொருளை உணர்ததுகின்றன. அவ்வண்ணமே ஈண்டும் பூமி அல்லது நிலம் என்னும் சொல்லும் ஓர் ஆவிக்குரிய மெய்ப்பொருளை உணர்த்துகின்றது. பூமி என்றும் நிலம் என்றும் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ள எபிரெய, கிரேக்க மொழிகளிலுள்ள சொற்களை எழுத்தின்படியும் ஆவிக்குரிய பொருளின்படியும் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ப நாம் மொழிபெயர்க்கலாகும்.

“அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்வார்கள்” என்னும் இயேசுவின் வாய்மொழியானது எழுத்தின்படி “வாக்குத்தத்தத்தின் தேசமாகிய” கானான் நாட்டைச் சுதந்தரித்துக்கொள்வார்கள் என்று பொருள்படும். பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசன வாசகத்தின் வாயிலாக அவர் புதிய ஏற்பாட்டின் காலத்திற்குரிய ஆசீர்வாதங்களைக் குறித்துப் பேசினார். புதிய ஏற்பாட்டின் காலத்திலுள்ள தேவனுடைய பிள்ளைகளாகிய ஆவிக்குரிய இஸ்ரவேலருக்கு, பழைய ஏற்பாட்டின் காலத்திலுள்ள தேவனுடைய பிள்ளைகளாகிய மாம்சத்தின்படியுள்ள இஸ்ரவேலர்கள் ஓர் உவமையாயிருக்கிறார்கள். அவ்வண்ணமே முன்னவர்களாகிய மாம்சத்தின்படியுள்ள இஸ்ரவேலருக்கு உரித்தான கானான் தேசமானது பின்னவர்களாகி ஆவிக்குரிய இஸ்ரவேலருக்கு உரித்தான ஒட்டுமொத்தமான பரலோகத்தின் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களாகிய பரம கானானுக்கு ஒப்பவையாயிருக்கிறது. புதிய ஏற்பாட்டின்கீழ்ப் “பூமியைச் சுதந்தரித்துக்கொள்வதென்பது” தேவனுடைய மக்கள் பரலோகத்துக்குரிய அதிசயமான ஆசீர்வாதங்களை அனுபவிப்பதாகும். அதுவே தேவனுடைய சுதந்தரரும் கிறிஸ்துவின் உடன் சுதந்தரருமாம் (ரோமர் 8:17). அதாவது கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலுள்ள சகல ஆசீர்வாதங்களாலும் பிதாவாகிய தேவன் நம்மை ஆசீர்வதித்துள்ள ஆசீர்வாதங்களாகும் (எபேசி.1:3). இந்த மெய்யான சமாதானத்துக்கும் இளைப்பாறுதலுக்குமே இஸ்ரவேலரின் கானானின் ஆசீர்வாதங்கள் ஓர் உவமையாயிற்று.

இறுதியாக, சாந்தகுணமுள்ளவர்கள் நீதி வாசமாயிருக்கும் புதிய பூமியையும் (2.பேதுரு 3:13) சுதந்தரித்துக்கொள்வார்கள் என்பதில் எத்துணையும் ஐயமில்லை.

4. நாலாம் பேறு

"நீதியின்மேல் பசி தாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் திருப்தியடைவார்கள்"

தேவனுடைய ஆவியானவரால் விழிப்புணர்வடைந்த ஒருவனுடைய உள்ளத்தில் நடைபெறுகிற செயல்களை முதல் மூன்று அருட்பேறுகளிலும் காணுமாறு நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். முதலாவது, என்னிடத்தில் நேரிடுவது ஒன்றுமில்லாமை, வெறுமையாகியவைகளினால் உண்டாகும் சிறுமைப்பாட்டுணர்வாகும். இரண்டாவதாக, என்னை நானே நியாயந்தீர்த்தலும், குற்றங்காணுதலும், காணமற்போன இழப்பு நிலையாகியவைகளைக் கண்டு துயருறுதலுமாகும். மூன்றாவதாக, என்னை நானே நீதிமான் என்கிற நாட்டத்தை ஒழித்துவிட்டு, என்னுடைய தனிப்பட்ட புண்ணியங்களைத் துறப்பதும், தேவ சமுகத்தில் புழுதியிலும் சாம்பலிலும் உட்காருவதுமாகிய செயல்களாகும். இங்கேதான் நாலாம் அருட்பேற்றிலுள்ளபடி என்னைவிட்டு என்னுடைய அகக்கண்கள், ஒரு சிறப்பான காரணத்தை முன்னிட்டு, தேவனிடமாகத் திரும்புகின்றன. என்னிடத்தில் இல்லாததும், ஆயினும் எனக்கு அவசரத் தேவையுமாயிருக்கிற தேவ நீதியைக்குறித்து ஒரு தேட்டம் உண்டாகிறது.

இப்பாடத்தின் மெய்யான பொருளைக் காணவேண்டுமாயின், பழைய ஏற்பாட்டிலுள்ள வேத வாக்கியங்களுக்கு நாம் செல்லவேண்டும். அதுவே சாலச் சிறந்த வழி. பின்னர் புதிய ஏற்பாட்டிலுள்ள நிருபங்கள் அளிக்கிற பேரொளியில் தேவநீதியின் பிரகாசத்தைக் காணவேண்டும்."வானங்களே, உயர இருந்து சொரியுங்கள். ஆகாய மண்டலங்கள் நீதியைப் பொழியக்கடவது. பூமி திறவுண்டு, இரட்சிப்பின் கனியைத் தந்து, நீதியுங்கூட விளைவதாக கர்த்தராகிய நான் இவைகளை உண்டாக்குகிறேன்" (ஏசாயா 45:8). இவ்வேத வாக்கியத்தின் முதற்பாகமானது இப்பூமிக்கு இறங்கி வந்த கிறிஸ்துவின் வருகையை நமக்கு ஓர் உருவகமாக அறிவிக்கிறது. " முரட்டு இருதயமுள்ளவர்களே, நீதிக்குத் தூரமானவர்களே, எனக்குச் செவிகொடுங்கள். என் நீதியைச் சமீபிக்கப் பண்ணுகிறேன். அது தூரமாயிருப்பதில்லை. என் இரட்சிப்பு தாமதிப்பதில்லை. நான் சீயோனில் இரட்சிப்பையும், இஸ்ரவேலுக்கு என் மகிமையையும் கட்டளையிடுவேன்" (ஏசாயா 46:12-13). "என் நீதி சமீபமாயிருக்கிறது. என் இரட்சிப்பு வெளிப்படும். என் புயங்கள் ஜனங்களை நியாயந்தீர்க்கும்! தீவுகள் எனக்குக் காத்திருந்து என் புயத்தின்மேல் நம்பிக்கையாயிருக்கும்" (ஏசாயா 51:5) கர்த்தர் சொல்லுகிறார்: நீங்கள் நியாயத்தைக் கைக்கொண்டு, நீதியைச் செய்யுங்கள். என் இரட்சிப்பு வரவும், என் நீதி வெளிப்படவும் சமீபமாயிருக்கிறது" (ஏசாயா 56:1). "கர்த்தருக்குள் பூரிப்பாய் மகிழ்கிறேன். என் தேவனுக்குள் என் ஆத்துமா களிகூர்ந்திருக்கிறது. அவர் இரட்சிப்பின் வஸ்திரங்களை எனக்கு

உடுத்தி, நீதியின் சால்வையை எனக்குத் தரித்தார்" (ஏசாயா 61:10). தேவனுடைய நீதியும் அவருடைய இரட்சிப்புமாகி இரண்டுசொற்களும் ஒரு பொருளையே உணர்த்துகிறதென்பதனை இவ்வேத வாக்கியங்கள் தெளிவுபடுத்துகின்றன.

மேற்காணும் வேதவாக்கியங்கள் ரோமருக்கு எழுதின பவுலின் நிருபத்தில் விரித்துரைக்கப்பட்டுகின்றன. அங்கே சுவிசேஷமானது அவைகளினால் முழு விளக்கம் பெறுகிறது. "கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக்குறித்து நான் வெட்கப்படேன். முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது. விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்த சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது" என்று பவுல் ரோமர் 1:16-17 வசனங்களில் சொல்லுகிறார். அது இயேசு கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவநீதியே. விசுவாசிக்கிற எவருக்குள்ளும் எவர்கள்மேலும் அது பலிக்கும். வித்தியாசமேயில்லை. எல்லாரும் பாவஞ்செய்து தேவமகிமையற்றவர்களாகி, இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்" என்று நாம் ரோமர் 3:22-24 வசனங்களில் வாசிக்கிறோம். "அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள் " என்று ரோமர் 5:19 ஆம் வசனத்தில் இந்நலமிக்க உறுதிமொழியானது அறிவிக்கப்பட்டுள்ளது. ரோமர் 10:4 வசனத்தில், " விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாகக் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்" என்றும் நாம் கற்றுக்கொள்கிறோம்.

"நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" ரோமர் 3:10. ஆகையால், பாவியான மனிதன் நீதியற்ற நிலையில் கைவிடப்பட்டவனாயிருக்கிறான். ஆகவே தேவன் தம்முடைய பிள்ளைகளெல்லாருக்காகவும் தனித்தனியே ஒவ்வொருவருக்காகவும் கிறிஸ்துவுக்குள் ஒரு பரிபூரணமான நீதியை உண்டுபண்ணியிருக்கிறார். தமக்கு எதிரிடையாகவுள்ள நியாயப்பிரமாணத்தின் எல்லாக் கோரிக்கைகளையும் சந்திக்குமாறு இந்த நீதியானது நம்முடைய பதிலாளும் பிணையாளியுமானவரால் நிறைவேற்றப்பட்டது. இந்த நீதியானது ஒரு விசுவாசிக்கிற பாவிக்கு உரிமையாக்கி அவனுடைய கணக்கில் வரவு வைக்கப்படும். எவ்வாறு தேவனுடைய பிள்ளைகளின் எல்லாப் பாவங்களும் மாற்றப்பட்டுக் கிறிஸ்துவின்மேல் சுமத்தப்பட்டதோ, அவ்வாறே கிறிஸ்துவின் நீதியும் தேவனுடைய பிளளைகளுக்குச் சொந்தமாயிற்று (2.கொரி.5:21). இந்தப் பரிபூரணமான நீதியைக்குறித்துள்ள உயிர் நிலையானதும் நலமிக்கதுமான

இப்பாடப் பொருள்பற்றிய வேதாகமப் போதனையானது சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் பொழிப்புரையேயாகும்.

“நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்” கடுமையாய் உணருமாறுள்ள ஆத்துமாவின் படுமுனைப்பான விருப்பத்தைப் பசியும் தாகமும் வெளிப்படுத்துகின்றன. முதலாவது, தேவனுடைய தூய்மையான கோரிக்கைகளைப் பரிசுத்த ஆவியானவர் நம்முடைய அகக் கண்களின் முன்னால் கொண்டுவருகிறார். அவர் தேவனுடைய முழுநிறைவான குறையளவை நமக்கு வெளிப்படுத்துகிறார். அக்குறியளவை அவர் ஒருபோதும் தளர்த்த முடியாது. “ வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்” (மத்.5:20) என்று நம்முடைய நீதியின் குறியளவைக்குறித்து அவர் நினைப்பூட்டுகிறார். இரண்டாவது, படுமோசமான தன்னுடைய வறுமையுடன், தேவனுடைய இயலாமையையும் உணர்கிற நிலையில் நடுங்கும் ஓர் ஆத்துமா தன்னுடைய உதவியற்ற நிலையைக் காண்கிறது. வேதனை நிறைந்த இக்கண்டுபிடிப்பு அவனுக்குள் துக்கத்தையும் பெருமூச்சையும் உண்டாக்குகிறது. நீங்கள் இவ்வாறு துக்கித்துப் பெருமூச்சுவிட்டதுண்டோ? மூன்றாவது, பரிசுத்த ஆவியானவர் அவனுடைய உள்ளத்தில் அப்பொழுது கொடிய பசியையும் தாகத்தையும் உண்டாக்குகிறார். உணர்வடைந்த பாவியானவன் தனக்குப் புறம்பாக ஆறுதலைத் தேடிக் கண்டடையுமாறு அப்பசியும் தாகமும் அவனை நெருக்குகிறது. அப்பொழுது, “நம்முடைய நீதியாயிருக்கிற கர்த்தராகிய” (எரேமி.23:6) கிறிஸ்துவின்பால் விசுவாசிக்கிற கண்கள் வழி நடத்தப்படுகின்றன.

முந்தின அருட்பேறுகளைப்போலவே இந்த நாலம் அருட்பேறு இருநிலை அனுபவத்தை விளக்குகிறது. பாவியானவன் விசுவாசத்தினால் கிறிஸ்துவினிடம் திரும்புமுன்னர் உண்டாகிற முதனிலையான பசிதாகத்தை இது குறிப்பிடுகிறது. ஆயினும் இப்பசியும் தாகமுமே இரண்டாம் நிலையாக இரட்சிக்கப்பட்டுள்ள எல்லாப் பாவிகளிடமும் ஓர் இடையறா வாஞ்சையாய் அவர்களுடைய மரண நாள் மட்டும் குடிகொள்ளுகிறதென்பதனையும் குறிப்பிடுகிறது. தேவ கிருபையின் செயல்களாகிய இப்பசியும் தாகமும் நம்முடைய வாழ்க்கையின் பல்வேறு கட்டங்களில் மீண்டும் மீண்டும் உணரப்படும். இயேசு கிறிஸ்துவினால் இரட்சிக்கப்படும்படி விரும்பிய ஒருவன் இப்போது அவருக்கு ஒப்பாகவேண்டுமென்னும் வாஞ்சையினால் எண்ணி எண்ணி ஏங்குகிறான். பரந்த நோக்கத்துடன் காண்போமாயின் இப்பசியும் தாகமும் நாள்தோறும் புதிதாக்கப்படுகிற உள்ளத்தில் தேவன்மேலுள்ள நம்முடைய வாஞ்சையுடன் கூடிய கதறுதலுமாயிருக்கிறது (சங்.42:1). இதுவே தேவனோடு நெருக்கமாகச் சஞ்சரிப்பதற்கும் அவருடைய குமாரனுக்கு ஒப்பான பூரண சாயலையடையும்படி

நாடுவதற்கு ஏதுவான ஒரு வாஞ்சையுமாம். நம்மைப் பலப்படுத்தி, திடப்படுத்தி, திருப்தியளிக்கிற தேவனுடைய ஆசீர்வாதங்களுக்குக் காரணமாகவுள்ள நம்முடைய புதிதான சுபாவம் அல்லது தன்மை இயல்பின் பேரார்வத்தினையே இது காண்பிக்கிறது.

நாலாம் அருட்பேற்றிற்குரிய வேதவாக்கியமானது மாம்ச சிந்தையுள்ள மக்கள் கண்டுகொள்ள முடியாதபடி ஒரு முரண்பாடு மெய்ந்நிலையாயிருக்கிறது என்பது தெளிவு. ஜீவ அப்பமாயிருக்கிறவரும், சகல பரிபூரணமும் தமக்குள்ளே வாசமாயிருக்கப் பெற்றவருமாகிய கிறிஸ்து இயேசுவோடு உயிர்நிலையான ஐக்கியத்தினால் இணைக்கப்பட்டோர் மேலும் பசியும் தாகமுமாயிருக்கும் நிலையில் காணக்கூடுமோ? ஆம், நாளும் பதிதாக்கப்படுகிற இருதயத்தின் அனுபவம் அதுவே. இந்த வசனத்திலுள்ள “பசிதாகமுள்ளவர்கள்” என்னும் வினையாலணையும் பெயரை நோக்குக. நிகழ்காலத்தைச் சுட்டிக்காண்பிக்கிற வினைமுற்றே பெயரின் தன்மையடைந்து வினையாலணையும் பெயரால் விளங்குகிறது. அருமையான நண்பரே, பசியையும் தாகத்தையும் பொருத்தமட்டில் நீங்கள் நிகழ்கால அனுபவமுடையவர்களாயிருக்கிறீர்களா? அல்லது அடைந்தாயிற்று என்று மனநிறைவுடன் இருக்கிறீர்களா? நீதியினிமித்தமாய் உண்டாகிற பசியும் தாகமும் தேவனுடைய மெய்யான பரிசுத்தவான்களுக்கத் தொடர்ந்து இடைவிடாமல் நிகழ்கிற ஓர் அனுபவமாயிருக்கிறது (பிலி. 3:8-14).

“ அவர்கள் திருப்தியடைவார்கள்” நம்முடைய வேதபாடத்துக்குரிய இவ்வேத வாக்கியத்தின் முதற்பகுதியைப்போன்றே இதுவும் இருநிலை நிறைவேற்றமாயிருக்கிறது. தொடக்கமும் தொடர்ந்து நடைபெறுவதுமாகிய ஓர் அனுபவமாகும். ஓர் ஆத்துமாவில் தேவன் பசியையும் தாகத்தையும் உண்டாக்குவாராயின், அவரே அப்பசியையும் தாகத்தையும், ஆற்றி அவனுக்குச் சாந்தியளிக்கும்படியாகவே அவற்றை மிகவும் கடுமையாக்குகிறார். தனக்கு வேண்டுவதெல்லாம் கிறிஸ்துவே என்று ஓர் ஏழைப்பாவியானவன் உணர்த்தப்படும்போது, கிறிஸ்துவின்பால் இழுத்துக்கொள்ளப்பட்டு அவன் நடத்தப்படவேண்டுமென்பதே தேவனுடைய நோக்கமும் முடிவுமாகும். அதுவே பரிசுத்தமுள்ள தேவனுக்கு முன்பாக அவனுடைய நீதியாயிருக்கிறது. அவன்தானே புதிதாய்க் கண்டுகொண்ட தன் நீதியாக, கிறிஸ்துவைக்குறித்து அறிக்கைபண்ணும்போது பெருமகிழ்ச்சியடைகிறான் (1.கொரி.1:31) அத்தகைய ஒருவனைத்தான் தேவன் பரிசுத்தவான் என்று அழைக்கிறார் (1.கொரி.1:2, 2.கொரி.1:1, எபேசி.1:1, பிலி.1:1) அவனே மதுபானத்தினால் அல்லாமல், பரிசுத்த ஆவியினால் நிறைந்து (எபேசி.5:18) எப்பொழுதும் ஆவியின் நிறைவுக்குள் காணப்படவேண்டும். எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானத்தினால் நிறைந்து (பிலி.4:7) அவன் வாழ்க்கை நடத்தவேண்டும்.

இவ்வாறு கிறிஸ்துவின் நீதியின்மேல் நம்பிக்கை வைத்து வாழும் மக்களாகிய நாம் எத்துணையும் துயரத்தின் கலப்படமில்லாத பேரின்பமாகிய தெய்வீக அசீர்வாதத்தினால் ஒரு நாள் நிரப்பப்படுவோம். அன்பிற்கும் கீழ்ப்படிதலுக்கும் உரிய எல்லாச் செயல்களையும் நமக்குள் நடப்பிக்கிற தேவனை (பிலி.2:12-13) நன்றியோடு போற்றித் துதிக்குமாறு நாம் துதிகளாலும் ஸ்தோத்திரங்களாலும் நிரப்பப்படுவோம். நம்மிலும் நமக்காகவும் தேவன் நடப்பிக்கிற அவருடைய இரட்சிப்பின் செயலின் விளைவாகிய வெளியரங்கமான கனிகள் நன்றியுடன் கூடிய நம்முடைய துதிகளும் ஸ்தோத்திரங்களுமேயாகும். இந்த உலகத்தில், “அவர் பசியுள்ளவனை நன்மைகளினால் நிரப்புகிறார்” (லூக்கா 1:53). கர்த்தரைத் தேடுகிற மக்களுக்கு (சங்.34:10) அருளப்படுகிற நன்மைகளை இவ்வுலகமானது கொடுக்கவும் முடியாது. அவைகளைத் தடுத்து நிறுத்தவும் முடியாது. தம்முடைய மேய்ச்சலின் ஆடுகளாகிய நமக்குத் தேவன் நன்மையும் கிருபையும் அளிக்கிறார். நம்முடைய பாத்திரம் நிரம்பி வழிகிறது (சங். 23:5-6). ஆயினும் இப்பொழுதும் நாம் அனுபவிக்கிற தேவ நன்மைகள் யாவும், “தேவன் தம்மில் அன்பு கூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளில்” (2.கொரி.2:9). வெறும் முன்னுகர்வு அல்லது ருசி பார்த்தல்தான். நித்தியராஜ்யத்தில் நாம் அவருக்கு ஒப்பாயிருப்போமாகையால் (1.யோவான் 3:2) பூரண பரிசுத்தத்தினால் நிரப்பப்பட்டு நாம் அங்கே அவருடன் வாழுவோம். அப்பொழுது நம்முடைய பாவத்தை என்றென்றமாய் ஒழித்துவிடுவோம். அங்குப் பசியுமில்லை. தாகமுமில்லை.

5. ஐந்தாம் பேறு

“இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்:
அவர்கள் இரக்கம் பெறுவார்கள்”

இதுகாறும் நாம் தியானித்துக்கொண்டிருந்த நான்கு அருட்பேறுகளிலும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய போதனையின் முக்கிய அம்சங்களாகிய ஆவிக்குரிய விழிப்புணர்வு, மறுரூபமாகுதல் ஆகியவைகளில் ஒரு தெளிவான வளர்ச்சி இருப்பதைக் கவனித்தோம். முதலாவது, நான் ஒன்றுமில்லை: என்னிடத்தில் ஒன்றுமில்லை என்னால் ஒன்றும் கூடாதென்னும் ஆவிக்குரிய வறுமையாகிய மெய்ந்நிலையை அடைகிறோம். இரண்டாவதாக பாவஉணர்வு அதாவது, தேவனுக்கேற்ற துக்குத்தை உண்டாக்குகிற ஒரு வகையான குற்ற உணர்வு ஏற்படுகிறது. மூன்றாவதாக, நம்மையே சார்ந்திருப்பதை விடுத்து தேவனுடைய சமுகத்தில் தூளிலும் சாம்பலிலும் உட்காரத்தக்கதான மனத்தாழ்வை அல்லது சாந்த குணம் உண்டாகிறது. நாலாவதாக, கிறிஸ்துவையும் அவருடைய இரட்சிப்பையும் பெரிதும் வாஞ்சிக்கிற

ஒரு மாபெருந் தேட்டம்-அதாவது கிறிஸ்துவைப் பற்றும் நீதியின்மேலுள்ள பசியும் தாகமும் தொடர்கிறது. ஆயினும் இவைகளெல்லாம், ஒருவழியில், எதிர்மறைப் பண்புகளேயாகும்: அதாவது விசுவாசிக்கிற பாவியானவன் தனக்குள்ளே காண்கிற குறைபாடுகளைக் குறித்துள்ள கருத்துணர்வும், நலமானவைகளை நாடித்தேடுகிற பேரார்வமுமாயிருக்கின்றன. ஆயினும் அடுத்து வருகிற நான்கு அருட்பேறுகளிலும் விசுவாசிகளிடம் மறுபிறப்பின் விளைவாகிய புதிய சிருஷ்ரிப்பின் கனிகளையும், மறுரூபமாக்கப்பட்ட நிலைமையிலுள்ள நல்லொழுக்கத்தின் ஆசீர்வாதங்களையும் காணலாகும். தேவனுடைய சத்தியத்தின் ஒழுங்கு முறையின் சிறப்பினை மறுபடியும் எவ்வளவு நன்றாய் இது நமக்குக் காண்பிக்கிறது. பாருங்கள்!

“இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்: அவர்கள் இரக்கம் பெறுவார்கள்” தாங்கள் செய்கிற புண்ணியங்களில் நம்பிக்கையுடைய மக்களால் இந்த வேத வாக்கியமானது பெரியும் திரித்துக் கூறப்படுகிறது. கிரியைகளினால் உண்டாகிற இரட்சிப்பைக் குறித்து வேதாகமம் போதிக்கிறதென்று வற்புறுத்துகிற இவர்கள் தங்களுடைய அழிவுக்கேதுவான தவறான கொள்கைக்க இவ்வேத வாக்கியத்தை ஆதாரமாய்ப் பயன்படுத்துகின்றனர். ஆயினும் நம்முடைய கர்த்தரின் நோக்கமோ நம்முடைய சீடர்களின் மெய்யான ஒழுக்க நலத்தினை விளக்குவதேயல்லாமல், தேவனிடமிருந்து வருகிற இரக்கத்தின்பாலுள்ள பாவிகளின் நம்பிக்கைக்கு ஆதாரமாகிய அடித்தளத்தைச் சுட்டிக்காண்பிப்பதன்று. நல்லொழுக்கத்திள் முதன்மையான பண்பு நலம் இரக்கம் பாராட்டுதலாகும். நம்முடைய கர்த்தருடைய உபதேசத்தின்படி, தம்முடைய உன்னதமான காருண்யத்தில் களிகூருகிற தேவனுடைய மகிழ்ச்சியோடு நெருக்கமான தொடர்புடைய அவர்தம் தூய்மையான இறைமை நலத்தின் இன்றியமையாய்ச் சிறப்புக்கூறு இரக்கமேயாகும்.

எல்லா அருட்பேறுகளிலும் இவ்வருட்பேறு மத்தேயு 5 ஆம் அதிகாரத்தில் வரும் இடம் இதை விளக்க உதவுகிற மற்றுமொரு திறவுகோலாயிருக்கிறது. முதல் நான்கு அருட்பேறுகளும் பரிசுத்த ஆவியானவரால் உயிர்ப்பிக்குப்பட்ட ஓர் ஆத்துமாவின் இருதயத்தில் நிகழ்கிற ஆவிக்கரிய அடிப்படை பயிற்சிகளை விளக்குகின்றன. முந்தின வேதவாக்கியத்தில் ஒருவன் கிறிஸ்துவின்மேல் பசிதாகமாயிருப்பதையும், பின்னர் அவரால் நிரப்பப்படுவதையும் நாம் காண்கிறோம். இவ்வாறு கிறிஸ்துவினால் நிரப்புப்படும்போது ஏற்படுகிற முதல் விளைவுகளையும் சாட்சியங்களையும் நமக்கு இவ்வருட்பேறு காண்பிக்கிறது. கர்த்தரின் இரக்கத்தைப் பெற்றுக்கொண்ட, இரட்சிக்கப்பட்ட பாவியாகிய ஒருவனே இப்பொழுது இரக்கம் பாராட்டுகின்றான்.

தேவனுடைய இரக்கத்தைக் குறித்து நாம் உரிமைபாராட்ட வேண்டுமெனில், நாமும் மற்றவர்களுக்கு இரக்கம் பாராட்டவேண்டுமென்று அவர் நம்மிடம் எதிர்பார்க்கிறரா? இல்லை. அவ்வாறு எதிர்பார்க்கப்படுமாயின், அது தேவகிருபையின் முழு நிறைவான தீர்மானத்தைக் கவிழ்த்துப்போடுவதாகவல்லவோ முடியும்! அவருடைய அதிசயமான இரக்கத்தைப் பெற்று மகிழ்கிற நான் மற்றவர்கள்பால் இரங்கி அவர்களுக்கு உதவி செய்யாமலிருக்க முடியாது.

இரக்கம் பாராட்டுதல் என்றால் என்ன? அது பிற மக்களோடு பிற கிறிஸ்தவர்களோடும் பழகும் கிருபையுள்ளம் ஆகும். அது தம் நோய்போல் பிறர்நோய் கண்டு உருகுகிற அன்பும் அறமுமாம். அது சிறுமைப்படுகிற மக்களின் பாடுகளை மனவுருக்கத்தோடு நோக்கும் ஓர் ஆவியாகும். பழி வாங்கும் மனப்பான்மையின்றி இன்னா செய்தார்க்கும் இனியவே செய்கிற கிருபையும் அதுவே.

அது மன்னிக்கிற ஆவியாகும்: பதிலுக்குப் பதில் செய்யாமலிருக்கிற ஆவியும் அதுவே. தன்னுடைய நேர்மையை நிலைநாட்ட முற்படுகிற எல்லா முயற்சிகளையும் கைவிடுகிறதும், தீமைக்குத் தீமை செய்யாமல் நன்மை செய்வதும், பகைமையுள்ள இடத்தில் அன்புகூருவதுமாகிய ஆவியாகும். இதுவே இரக்கம் பாராட்டுதலாகும். மன்னிக்கப்படும்போது இரக்கத்தைப் பெற்றுக்கொள்ளும் ஆத்தமா இரக்கத்தின் எழில் நலத்தைப் பாராட்டுகிறது: தனக்குக் காண்பிக்கப்பட்ட அதே கிருபையைத் தீமை செய்கிற ஏனைய மக்களிடமும் காண்பிக்கும்படி பேரார்வங்கொள்கிறது.

இவ்வாறு இரக்கம் பாராட்டுகிற மனநிலத்தினை நாம் நம்முடைய வீழ்ச்சியுற்ற மானிட சுபாவத்தின் உடைமையாகக் கருத முடியாது. கிறிஸ்தவர்களல்லாத வேறு சிலமக்களிடம் இரக்கம் பாராட்டுகிற அருங்குணத்தை நாம் காணலாகும். மற்றவர்களுடைய பாடுகளையும் துயரங்களையும் கண்டு அவர்களும் இரங்குகிறார்கள். தமக்குத் தீமைசெய்தவர்களை மன்னிக்கும்படி எப்பொழுதும் ஆயத்தமாயிருகஇகிறார்கள். பொதுவாக நோக்குமிடத்து இது பாராட்டுதற்குரிய ஒன்றுதான். ஆயினும் ஈண்டுக் கிறிஸ்துவானவர் தாதே தம்முடைய ஆசீர்வாதத்தை வழங்குகிற இரக்கம் பாராட்டும் நிலையைவிட மிகவும் குறைவுடையதேயாகும். மாம்சத்தின் அடிப்படையில் இயங்கும் தன்மை ஆவிக்குரியதல்ல. ஏனெனில் அத்தன்மை வேதாகமத்தின் அடிப்படையிலோ அல்லது தெய்வீக அதிகாரத்தின் கீழோ இயங்குகிறதில்லை. தேவனுடைய இரக்கத்தினால் கவரப்பட்டு, அந்த இரக்கத்தோடு நெருங்கிய உறவுகொண்டு இயங்கும் இரக்கத்தன்மையையே இவ்வருட்பேறு விளக்குகிறது.

தேவனுடைய பிள்ளைகளிடம் பரிசுத்த ஆவியானவரால் புதுப்பிக்கப்பட்ட புதிய சுபாவத்தின் விளை பலனைத்தான் இரக்கம் பாராட்டுதல் என்று இவ்வேதப் பாடம் கூறுகிறது. எவ்வகையிலும் தகுதியில்லாத நன்மைப்போன்ற கீழ்மக்களிடம் தேவன் பாராட்டுகிற கிருபை, இரக்கம், நீடியபொறுமையாகிய அவருடைய அதிசயமான குணங்களைத்தியானிக்கும்பொழுதுதான், இரக்கம் பாராட்டுதல் நம்முள் செயல்படத் தொடங்கும். என்மேலுள்ள தேவனுடைய உயர்தனி இரக்கத்தினை எவ்வளவு அதிகமாய்த் தியானிக்கிறேனோ, அவ்வளவு அதிகமாக நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பாடுகளின் வாயிலாக அவியாத அக்கினியினின்றும் விடுவிக்கப்பட்டுள்ள விடுதலையே நான் நினைவுகூறுவேன். தேவ கிருபைக்கு நான் எவ்வளவு அதிகமாயக் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதனை உணரும்பொழுதுதான், எனக்குத் தீமை செய்து, என்னைப் பகைத்து வெறுக்கிற யாவர் மேலும் நானும் அவ்வளவு அதிகமாக இரக்கம் பாராட்டவும் நன்மை செய்யவும் நாடுகிறேன்.

உன்னதத்திலிருந்து புதிதாய்ப் பிறக்கும்போது ஒருவன் பெற்றுக்கொள்கிற ஆவிக்குரிய சுபாவத்தின் பண்பு நலன்களில் ஒன்று இரக்கம் பாராட்டுதலாகும். தேவனுடைய மக்களிடம் காணப்படுதலாகும். தேவனுடைய மக்களிடம் காணப்படுகிற இவ்விரக்கம் பாராட்டுதல் பரலோகத்திலுள்ள அவர்களுடைய பிதாவிடமுள்ள ஏராளமான இரக்கத்தின் பிரதிபிப்பமேயாகும். இரக்கம் பாராட்டுதல் என்பது நம்முள் வாசமாயிருக்கிற இரக்கமுள்ள கிறிஸ்துவினாலுண்டாகிற, இயல்பானதும் தேவையானதுமான விளைபலன்களும் ஒன்றாயிருக்கிறது. இது நம்முடைய நடைமுறைவாழக்கையில் எப்பொழுதம் செயற்படாமலிருக்கலாம்: மாம்சத்திற்குரிய சிற்றின்ப நுகர்ச்சியினிமித்தமாக மூடி மறைக்கப்படலாம்: அல்லது தடை செய்யப்படலாம். ஆயினும் பொதுவான ஒரு கிறிஸ்தவனுடைய நல்லொழுக்கத்தின் நிலையான தன்மையையும், சிறப்பாக அவனுடைய நடைமுறை வாழ்க்கையின் பழக்க வழக்கங்களையும் கருத்திற்கொண்டு நோக்குவோமாயின், இரக்கம் பாராட்டுதலானது, யாதொரு ஐயப்பாட்டிற்குமிடமின்றி, புதிய மனிதனுடைய சிறப்புடைத் தன்மையாய் அமைகிறது.

“துன்மார்க்கனோ கடன் வாங்கிச் செலுத்தாமற் போகிறான்: நீதிமானோ இரங்கிக் கடன் கொடுக்கிறான்” (சங் 37:21). தன்னுடைய சகோதரனால் தீமை செய்யப்பட்டபோதிலும், பகைவர்கள் லோத்தையும் அவனுடைய எல்லா உடைமைகளையும் கைப்பற்றிச் சென்றுபொழுது, அவர்களைத் தொடர்ந்து முறியடித்து லோத்தையும் அவனுடைய எல்லா உடைமைகளையும் விடுவித்துக்கொண்டு வந்தது ஆபிரகாமுடைய இரக்கம் பாராட்டுதலேயாகும் (ஆதி 14:1-16). யோசேப்பு தன்னுடைய சகோதரர்களால் மிகவும் கொடுமையாய்

நடத்தப்பட்டானாயினும், அவர்களைத் தாராளமாய் மன்னிக்கும்படி செய்தது யோசேப்பின்பாலுள்ள இரக்கும் பாராட்டுதலேயாகும் (ஆதி 50:15-21).

கர்த்தருக்கு விரோதமாய்க் கலகம்பண்ணி, மீரியாம் கர்த்தரால் குஷ்டரோகத்தினால் வாதிக்கபட்டபொழுது கர்த்தரை நோக்கி, "என் தேவனே, அவளுக்கும் இரக்கும்" என்று மோசே கெஞ்சி மன்றாடினது அவனிடமுள்ள இரக்கம் பாராட்டதலேயாகும் (எண் 12:13). கொடுங்கோலனாகிய சவுல் தன் கையில் அகப்புட்டபோது பகைவனாகிய அவனைக் கொல்லாமல் அவனுடைய உயிரைத் தப்புவித்தது தாவிதின் இரங்கும் சிந்தையல்லவா? (1சாமு 24:1-22, 26:1-25). துக்கமான, அதேவேளையில் கருத்தைக் கவருமாறுள்ள மாறுபாடு முறைமையில் யூதாசைக் குறித்து, "அவன் தயை செய்யநினையாமல், சிறுமையும் எளிமையுமானவனைத் துன்பப்படுத்தி, மனமுறிவுள்ளுவனைக் கொலை செய்யும்படி தேடினான்" (சங் 109:16) என்று சொல்லுப்படுகிறது.

ரோமர் 12:8 ஆம் வசனத்தில், இரக்கஞ் செய்கிறவன் உற்சாகத்துடன் செய்யக் கடவன். என்றுரைக்கும் அப்போஸ்தனாகிய பவுல், இரக்கஞ் செய்கிற நம்மிடம் காண்படவேண்டிய ஆவியைக்குறித்தள்ள உயிர்நிலையான போதனையை நமக்கு வழங்குகிறார். இது ஏழைச் சகோதரர்களைத் தாங்கி அவர்களை ஆதரிக்கும் வகையில் நாம் வழங்குகிற பண உதவியைப்பற்றிய ஒரு நேரிடை அறிவுரையாயிருக்கிறது: ஆயினும் அல்லற்படுகிற மக்களிடம் காண்பிக்கும்படியான எல்லா வகையான காருணியச் செயல்களும் இந்த அன்புடைக் கொள்கைக்குள் அடங்கிவிடும்.

இரக்கஞ் செய்கிறவன், தனது விருப்பத்தோடு அவனுடைய மகிழ்ச்சியையும் வெளிப்படுத்துமாறு, உற்சாகத்துடன் செய்ய வேண்டும். உவகையோடும் உற்சாகத்தோடும் ஆற்றும் உதவியானது இவ்வுதவியைப் பெற்றுக்கொள்ளும் மக்களின் உணர்வுகளுக்கு விடுதலையளிக்கிறது: அல்லற்படும் மக்களின் துயரத்தை ஆற்றுகிறது. இத்தகைய உவகையுடன் கூடிய உற்சாகமானது ஆற்றுப்படுகிற உதவியின் தரத்தை மிகவும் உயர்த்துகிறது. இவ்வாறு கொடுத்து மகிழ்கிற இன்பத்தினை உணத்துகிற கிரோக்க மொழியிலுள்ள சொல்லானது, இரக்கஞ் செய்கிறவனுடைய அகத்தின் அன்பையும், புறத்தே இன் சொல்லுடன் கூடிய முகத்தின் மலர்ச்சியையும் வெளிப்படுத்துகிற ஓர் எழில் மிகு சொல்லுவாயிருக்கிறது. இவ்வாறு இரக்கஞ் செய்கிறவனுடைய அகத்தின் அன்பும் முகத்தின் மலர்ச்சியும் உதவி நாடி வருகிற மக்களுக்குக் காலைக் கதிரொளியாயும், அல்லற்பட்டு அழுகிற மக்களுக்கு அருமருந்தாயுமிருக்கிறது. "உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்" (2கொரி 4:6) என்று வேதாகமம் நமக்கு அறிவிக்திறபடியால், தம்முடையய

கடிந்துரைக்குச் செவி கொடுத்துச் சேருகிற நம்முடைய ஆவியைக் கூர்ந்து நோக்குகிறார் தேவன் என்பதனை நாம் உறுதியுடன் நம்பலாகும்.

“அவர்கள் இரக்கம் பொறுவார்கள்” இம்மண்ணுலகில் வாழக்கிற நம்முடைய வாழ்க்கையின்மீது தேவன் தாமே தம்முடைய அரசாங்கத்தில் பிறப்பித்துள்ள ஒரு கற்பனையை அல்லது பிரமானத்தை இச்சொற்கள் விளக்குகின்றன. “மனிதன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்” (கலா 6:7) என்னும் நாமெல்லாரும் அறிந்துள்ள வேதவாக்கியமானது இதனைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறது. தங்களுடைய கொடுக்கல்- வாங்கல்களில் இரக்கும் பாராட்டுகிற கிறிஸ்தவர்கள் தம்முடன் வாழ்கிற ஏனையமக்களிடமிருந்து இரக்கம் பெறுகின்றனர். ஏனெனில் “நீங்கள் மற்றவர்களுக்க அளக்கும் அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்” (மத் 7:2). ஆகையால்தான் “நீதியையும் தயையையும் பின்பற்றுகிறவன் ஜீவனையும் நீதியையும் மகிமையையும் கண்டடைவான்” (நீதி 21:21) என்று எழுதப்பட்டுள்ளது.

“தயையுள்ள மனுஷன் தன் ஆத்துமாவுக்கு நன்மைசெய்துகொள்ளுகிறான்” (நீதி 11:17) என்னும் திருவாய் மொழிக்கிணங்க இரக்கம் பாராட்டுகிற மனிதன் தனக்குத் தானே நன்மை செய்கிறான். ஈத்துவக்கம் இன்பத்திலும் இரக்கம் பாராட்டுவதிலும் நமக்கு ஒரு மன நிறைவு உண்டாகிறது. தன்னலம் படைத்த மனிதனுடைய செல்வமும் மகிழ்ச்சியும் இரக்கம் பாராட்டுகிற மனிதனுடைய மனநிறைவுடன் ஒப்பிடத் தக்கதன்று. “தரித்திரனுக்கு இரங்குகிறவனோ பாக்கியமடைவான்” (நீதி 14:21). தேவன் தாமே மனநிறைவு கொள்ளுதற்கு மூலாதரமாயிருப்பதும் இரக்கம் பாராட்டுதலேயாகும். “அவர் கிருபை செய்ய விரும்புகிறார்” (மீகா 7:18). ஆகையால் இரக்கம் பாராட்டுதலே நம்முடைய விருப்பமாயும் இருக்கவேண்டும்.

“அவர்கள் இரக்கம் பெறுவார்கள்” இரக்கம் செய்கிற இக்கிருபையின் வாயிலாக இரக்கம் பாராட்டுகிற கிறிஸ்தவன் தன்னுள்ளுத்தில் மகிழ்ச்சியைக் கண்டடைகிறான்: கர்த்தருக்கு தம்முடைய அருளாட்சியில் அவனுடைய இரக்கத்தின் பலனை அவனோடு வாழ்கிற மக்களிடமிருந்து பெற்றுக்கொள்ளுமாறு வகை செய்கிறார்.அதனோடமையாது அவன் தேவனிடமிருந்தும் இரக்கத்தைப் பெற்றுக்கொள்கிறான். “தயவுள்ளவனுக்கு நீர் தயவுள்ளவர்” (சங் 18:25) என்னம் வசனத்தின் வாயிலாக, தாவீது இவ்வுண்மையை அறிவிக்கிறான். இதனையே மறைமுகமாகத் தம்முடைய சீடர்களுக்கு கண்டித்துணர்த்தும்போது, “மனிதர்களுடைய தம்பி தங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்ககள் தப்பிதங்களையும் மன்னிக்க மாட்டார்” (மத் 6:15) என்று நம்முடைய இரட்சகர் சொல்லுகிறார்.

“அவர்கள் இரக்கம் பெறுவார்கள்” முன்னுள்ளு அருட்பேறுகளுடன் இணைந்து வருகிற வாக்குத்தத்தங்களைப் போலவே, இவருட்பேறு தனது வாக்குத்தத்தத்தின் இறுதி நிறைவேறுதலுக்காகத் தன்னுடைய எதிர்காலத்தை ஆவலுடன் நோக்கிக் கொண்டிருக்கிறது. 2தீமோ 1:16-18 ஆம் வசனங்களில், “ஓநேசிப்போருவின் வீட்டாருக்கும் கர்த்தர் இரக்கங்கட்டளையிடுவாராக” என்றும் “அந்த நாளிலே அவன் இரக்கத்தைக் கண்டடையும்படிலு கர்த்தர் அவனுக்கு அனுக்கிரகஞ் செய்வாராக” என்றும் அப்போஸ்தலனாகிய பவுல் எழுதியுள்ளதை நாம் காணலாகும். யூதா 21 ஆம் வசனத்திலும், “நித்திய ஜீவனுக்கேதுவாவ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய இரக்குத்தைப் பெறக் காத்திருங்கள்” என்று பரிசுத்தவான்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். மகிமையுள்ள கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது, அவருக்குச் சொந்தமானவர்களா அவரால் மீட்கப்பட்டுள்ள மக்களாகிய நம்மை ஏற்றுக்கொள்ளுகிற அனுபவத்தை இது குறிப்பிடுகிறது.

6. ஆறாம் பேறு

“இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்.
அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்”

கர்த்தருடைய பகைவர்கள் தகாதவிதமாய்ப் பொருள் படுத்துகிற அருட்பேறுகளுள் இது மற்றொன்று. அவர்களுடை முன்னோடிகளாகிய பரிசேயர்களைப் போலவே தாங்களே சத்தியத்திற்காகப் போராடுகிறவர்களென்று அவர்கள் நினைத்துக்கொள்கின்றனர். மேலும் அவர்கள் மெய்யான தேவனுடைய மக்கள் உரிமைபாராட்டத்துணியும் பரிசுத்த வாழ்க்கையினும், தங்களுடைய வாழ்க்கை அதிக மேன்மையானதாகப் பெருமையடித்துக்கொள்கின்றனர். இன்னும் மறுபிறப்பின் அனுபவமில்லாத பழைய மனிதனுடைய முழுமையான பரிசுத்தத்தை உரிமைபாராட்டுகிற பேதைகளும் தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்பவர்களுமாகிய ஆத்துமாக்கள் இக்கிறிஸ்தவ யுகத்தில் இருந்துகொண்டு தானிருக்கிறார்கள். மற்றவர்களோ தங்களுடைய மாம்ச சுபாவமானது முற்றிலுமாக வேரறுக்கப்படுமளவுக்குத் தேவன்தாமே தங்களைப் புதிப்பித்துவிட்டாரென்றும், ஆகையால் பாவங்களைச் செய்ய முடியாது என்பதுமட்டுமன்றி, பாவ இச்சைகளும் சிந்தனைகளும் தங்களுக்கில்லையென்றும் வற்புறுத்திக் கூறுகின்றனர்.

ஆயினும் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு அப்போஸ்தலனாகிய யோவான், “நமக்குப் பாவமில்லையென்போனால், நம்மை நாமே

வாஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது" (1.யோ.1:8) என்ற அறிவிக்கிறார். அவர்களோ தங்களுடைய வீணான வஞ்சகத்திற்குச் சாதகமாகப் பாவப்பரிகாரத்திற்கேதுவாகிய நீதியின் பிரமாணத்துக்குரிய நன்மைகளை விளக்குகிற வேதவாக்கியங்களை அனுபவ ஆதாரமாக சுட்டிக்காண்பிக்கின்றனர். " அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும்" (1.யோவான் 1:7) என்னும் வாக்கியமானது, கெடுக்கிற பாவ அசுத்தங்களின் கறைகளாகிய எல்லாவற்றினின்னும் நம்முடைய இருதயங்கள் கழுவிச் சுத்திகரிக்கப்படுகின்றன என்னும் பொருளில் வராமல், கிறிஸ்துவின் தியாகப் பலியானது நீதியின் பிரமாணமுறையின்படி நம்முடைய பாவங்களை நீக்கி சுத்திகரித்துக்கொள்ளுவதற்கு உதவியாயிருக்கிறதென்றுதான் போதிக்கிறது. கிறிஸ்துவுக்குள் புதிய படைப்பாக இருக்கிற மனிதனை விளக்குகிற அப்போஸ்தலனாகிய பவுல், "பழையவைகள் ஒழிந்துபோயின எல்லாம் புதிதாயின" (1.கொரி. 5:17) என்று கூறும்போது, கிறிஸ்தவனுடைய இருதயத்தின் புதியதான போக்கை அல்ல மனப்பான்மையைக் குறித்தே பேசுகிறார். மறுபிறப்பிற்கேதுவாகப் பரிசுத்தஆவியானவர் செயலாற்றுமுன்னருள்ள அவனுடைய உள்ளான மனப்பான்மைக்கு, இப்புதிய மனப்பான்மையோ முற்றிலும் மாறானது.

எழுப்புதல் அளிக்கிற தேவனுடைய பரிசுத்தவான்களின் வரலாற்றுக் குறிப்புகளிலிருந்து இருதயத்தின் பரிசுத்தமான வாழ்க்கையின் பாவமில்லாமையைப் பொருள்படுத்துமாறு வரவில்லை என்பது தெளிவாகும். நோவா குடித்து வெறித்திருந்தான். ஆபிரகாம் மெய்யை மறைத்துப் பேசினான். மோசே தேவனுக்குக் கீழ்ப்படியாமைக் காட்டினான். யோபு தன் பிறந்த நாளைச் சபித்தான். யேசபேலுக்குப் பயந்து எலியா தன்னுடைய உயிரைக் காத்துக்கொள்ளும்புடி ஓடினான். பேதுரு கிறிஸ்துவை மறுதலித்தான். இவைகளெல்லாம் கிறிஸ்துவ மார்க்கம் உண்டாவதற்கு முன்னர் நடைபெற்றவையல்லவா, என்று ஒருவர் ஒருவேளை கேட்கலாம். ஆம் உண்மைதான். அதன் பின்னரும் அதேவண்ணமாய்த்தான் நடைபெறுகின்றன.

அப்போஸ்தலானாகிய பவுலின் தேர்ச்சிபேறுகளினால் மேலான தேர்ச்சிபேறுகளுடைய ஒரு கிறிஸ்தவனைக் கண்டுபிடிக்கும்படி நாம் எங்கே போகலாம்? அவருடைய அனுபவம் தான் என்ன? ரோமர் 7:21-25 நன்மை செய்ய விரும்பின பவுலிடம் தீமை இருந்தது. அவருடைய மனதின் பிரமாணத்துக்கு விரோதமாய்ப் போராடுகிற பேறொரு பிரமாணத்தைக் தம்முடைய உடலின் உறுப்புக்களில் அவர் கண்டார். அவர் தாமே தம்முடைய மனதினாலே தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்கும் மாம்சத்தினாலே பாவப்பிரமாணத்திற்கும் ஊழியஞ் செய்தார். நம்முடைய இருதயங்களைத் தொடர்ந்து அலைக்கழிக்கிற எஞ்சியுள்ள அசுத்தத்தைப்பற்றியுள்ள கண்டுபிடிப்பும் விழிப்புணர்வுமே நம்முடைய

இருதயத்தின் பரிசுத்தத்தைக்குறித்துள்ள முடிவான சாட்சியங்களின் ஒன்றாயிருக்கிறது. இதுதான் சத்தியம், ஆயினும் நெருங்கிவந்து நம்முடைய பாவத்துக்குரிய வேதவாக்கியத்தை நோக்குவோமாக.

"இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்" இம்மலைப் பிரசங்கத்தின் எந்தப் பகுதிக்காவது பொருள்விளக்கம் தேடும்பொழுது, முதலாவது நாம் மனதில் இருத்திக் கொள்ளவேண்டியது என்னவென்றால், இப் பிரசங்கத்தை முதன்முதல் கேட்டவர்கள் யூதமார்க்கத்தில் பிறந்து வளர்ந்தவர்கள் என்பதுதான். ஆவியானவரால் மிகவும் ஆழமாய்ப் போதிக்கப்பட்டவராகிய ஒருவர் இவ்வாறு சொல்லுகிறார்.

"நம்முடைய கர்த்தர் நம் முன்னர் பயன்படுத்துகிற சொற்றொகுதியில், யூத மார்க்கத்தைச் சார்ந்த மக்களுக்குரிய புறத் தூய்மையின் நல்லொழுக்கத்தையும், அந்த நல்லொழுக்கத்துடன் தொடர்புடைய தேவனோடுள்ள அவர்களுடைய உறவின் சிறப்புரிமையையும், வெளிப்படையாகச் சொல்லாமல், குறிப்பிடுகிறரென்பதினை நான் நினைக்காமலிருக்கு முடியவில்லை. அவர்கள் விக்கிரகங்களினால் தீட்டுப்பட்டுள்ள மக்களினங்களிலிருந்து பிரிந்து வாழும் ஒரு தனிப்பட்ட இனமாயிருந்தார்கள், யேகோவாகிய தேவனுக்காகப் பரிசுத்தமாய் வாழும்படி பிரித்தெடுக்கப்பட்டவர்கள். ஜீவனுள்ள ஒரேமெய்த் தேவனாகிய அவர்களுடை தேவனை அவருடைய ஆராதனை ஒழுங்குமுறையின்படி, ஒரு பரிசுத்த ஜனமாக ஆராதிக்கும்புடி அவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். இந்த நல்லொழுக்கத்தைத் தங்களுக்கு உடைமையாக்கிக் கொள்வதிலும், இச்சிறப்புரிமையை அனுபவிப்பதிலும் யூதர்கள் பெருமிதங்கொண்டார்கள்.

"மேசியாவின் ஆட்சியின்கீழ் வாழும் குடிமக்களாக வேண்டுமென்று விரும்புகிறவர்களுக்கோ இதனிலும் உயர்வான நல்லொழுக்கமும் உயர்வான சிறப்புரிமையும் இருந்தன. புறத்தூய்மை மட்டுமன்றி அகத்தூய்மையாகிய இருதயத்தின் பரிசுத்தமும் அவர்களுக்கு வேண்டும். தேவனுடை மகிமையானது வாசம்பண்ணுகிற பரிசுத்தமான ஸ்தலத்தைச் சேரும்படி அனுமதிக்கப்படுவதுமன்றி, அவர்கள் தேவனை தரிசிக்கவேண்டும். அவரோடு மிகவும் நெருங்கி உறவு பாராட்டவேண்டும். இவ்வாறு யூத மார்க்கத்திலுள்ள மக்களுடைய புறம்பான ஒழுக்கம் சிறப்புரிமையாகியவைகளுக்கு மறுதலையான மேசியாவின் அருளாட்சியின்கீழ் வாழும் குடிமக்களுடைய ஆவிக்குரிய ஒழுக்கம், சிறப்புரிமையாகியவைகளின் ஒரு விளக்கமாக நோக்குமிடத்து, நம்முன்னர் வைக்கப்பட்டுள்ள வேதாகமப்பகுதி மிகமிக இன்றியமையாததும், பேரார்வத்தை உண்டாக்குவதுமாகிய சத்தியத்தினால் நிறைந்து காட்சியளிக்கிறது"

“இருதயத்திலே சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்” கிறிஸ்துவின் வாய்மொழியாகிய இச்சொற்றொடர் மறுபடியும் பிறக்கும்பொழுது பெற்றுக்கொள்ளுப்படுகிற புதிய இருதயத்தையோ, அன்றி நம்முடைய ஆத்துமாவின் நடைபெறுகிற தேவ கிருபையின் செயலின் விளைவாகிய நல்லொழுக்கத்தின் அறமுறையான மறுரூபமாகுதலையோ எதைக் குறிப்பிடுகிறதென்பதுபற்றிக் கருத்துவேற்றுமையுள்ளது. அநேகமாகச் சத்தியத்தின் இரண்டு பகுதிகளும் இச்சுத்திகரிப்பில் அடங்கும். நம்முடைய இரட்சகர் பகர்ந்துள்ள அவருடைய ஆசீர்வாதத்துக்கேதுவான இருதயத்தின் சுத்தமானது, உன்னதத்தினின்று பிறக்கிற புதிய பிறப்புடன் நிகழ்வதும், தொடர்ந்து ஆத்துமாவில் நடைபெற்றுக்கொண்டிருப்பதுமாகிய இரு நிலைகளிலுமுள்ள ஓர் உள்ளான சுத்திகரிப்பாயிருக்கிறது. மாம்ச சுபாவமுள்ள மனிதனில் இத்தகைய உள்ளான சுத்திகரிப்பு இல்லாதபடியால், கிறிஸ்துவினால் அறிவிக்கப்படுகிற இருதயத்தின் சுத்தமானது தேவபக்தியுள்ள மனிதனுக்கே உரியது. அது அவனுடைய மறுபிறப்பின்போது நடைபெற்ற பரிசுத்த ஆவியானவருடைய கிருபையுடன் தொடங்குகிறது.

“இதோ, உள்ளத்தில் உண்மையிருக்க விரும்புகிறீர். அந்தக்கரணத்தில் ஞானத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்” (சங்.51:6) என்று சொல்லியுள்ளார் சங்கீதக்காரன். தேவன் நம்மில் வற்புறுத்திக் கேட்கிற இந்த ஆவிக்குரிய சுத்தமானது, கிறிஸ்தவ உலகத்தில் இந்நாளில் நடைபெறுகிற பெருமுயற்சியின் விளைவாகிய புறம்பான புதுப்பித்தல்களையும் சீர்திருத்தங்களையும் ஊடுருவி அவைகளுக்கப்பாலும் செல்லுகிறது! இன்று நம்மைச்சுற்றிலும் காண்பவையெல்லாம் கிரியைகளின் வாயிலாக இரட்சிப்பைத் தேடுகிறவைகளின் கைங்கரியமாயிருக்கிறது. அல்லது மரபு வழுவாத சமயச்சார்படைய கோட்பாடுகளைக் கைக்கொண்டு மனநிறைவடைகிற மூளையறிவுக்குரிய தேவபக்தியாயிருக்கிறது. ஆயினும் தேவனோ இருதயத்தைப் பார்க்கிறார் (1.சாமு.16:7): அதாவது அவர் உள்ளான மனிதனையும் அவனுடைய அறிவு, உணர்வு, பற்றார்வம், சித்தம் உட்பட எல்லாவறறையும் கூர்ந்து நோக்குகிறார். இவ்வாறு தேவன் அகத்தைக் கூர்ந்து நோக்குகிறபடியால், அவர் தம்முடைய பிள்ளைகளுக்கு ஒரு புதிய இருதயத்தைக் கொடுக்கத்தான் வேண்டும் (எசேக்.36:26). இத்தகைய புதிய இருதயத்தைப் பெற்றுக்கொள்ள மக்கள் மெய்யாகவே பாக்கியவான்கள். கொடைவள்ளலாகிய தேவனுக்குப் பிரியமானது சுத்தமான இருதயமே!!

மேலே அறிவிக்கப்பட்டுள்ளதுபோலவே இந்த ஆறாம் அருட்பேறானது மறுபிறப்பின்போது நாம் பெற்றுக்கொண்ட புதிய இருதயத்தையும், அதனைத் தொடர்ந்து நம்முடைய ஆத்துமாவிலே தேவனுடைய கிருபையின் செயலினாலுண்டாகும் நல்லொழுக்கத்தின் விளைவாகிய மறுரூபமாகுதலையும்

கருத்துப்பொருள்களாகக் கொண்டுள்ளதென்று நாம் நம்புகிறோம். முதலாவது நடைபெறுவது மறுஜென்ம முழுக்காகும் (தீத்து 3:5) இம்முழுக்கினால் அகத்தின் பற்றார்வங்கள் சுத்திகரிக்கப்படுகின்றனவென்று அறிகிறோம். அதன் விளைவாக அவைகள் கீழானவைகளையல்ல, மேலானவைகளையே நாடுகின்றன. மறுபிறப்பினையடுத்து விசுவாசத்தினால் எல்லா விசுவாசிகளுடைய இருதயங்களிலும் நடைபெறுகிற சுத்திகரிப்பினைத் (அப்.15:9) தொடர்ந்து வருகிற மாறுதலுடன் இது மிகவும் நெருக்கமாய் இணைக்கப்படுகிறது. இதனோடு உடன் நிகழ்வதே மனச்சாட்சியின் சுத்திகரிப்பு (எபி.10:22). அறிந்துள்ள பழி பாவங்களின் சுமை நீக்கத்தையே இந்த மனச்சாட்சியின் சுத்திகரிப்பானது குறிப்பிடுகிறது. இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம் (ரோம 5:1).

கிறிஸ்துவினால் பாராட்டப்படுகிற இருதயத்தின் சுத்தமானது மேலும் கடந்துசெல்லுகிறது. பரிசுத்தம் என்றால் என்ன? தூய்மைக் கேடுகள், இவ்வுலக நேசம் ஆகியவைகளினின்று உண்டாகும் விடுதலையே பரிசுத்தமாகும். இது நேர்மையும் சுத்தமும் உத்தம இருதயமுமாம். நாம் அதற்கு தேவபக்தியின் எளிமை நலம் என்று விளக்கம் தரலாம். அது வஞ்சனை, நுட்பமான சதியாலோசனையாகியவைகளுக்கு எதிரிடையானது. மெய்யான கிறிஸ்தவ மார்க்கம் எல்லாத் துர்க்குணத்தையும், கபடத்தையும், வஞ்சகத்தையும் ஒதுக்கி ஒழித்துவிடுகிறது.

வாயின் சொற்களிலும் புறம்பான நடை உடை பாவனைகளிலும் தூய்மையாயிருப்பது மட்டும் போதாது. தேவனுடைய பிள்ளையை மெய்யாகவே விம்பித்துக் காண்பிக்கிற பண்பு நலன் அவனுடைய அகத்தூய்மையேயாகும். ஆதாவது, அவனுடைய விருப்பங்கள், செயல்நோக்கங்கள், உள்நோக்கமாகியவைகளின் தூய்மையாகும். ஆகையால், கிறிஸ்தவர்களென்று பெருமை பாராட்டுகிற எல்லாரும் தங்களைத் தாங்களே உய்த்து ஆராய்ந்து அறிந்துகொள்ளுவதற்கேதுவான மிகமிக இன்றியமையாச் சோதனை இதுவே. “என்னுடைய பற்றார்வங்கள் உன்னத்திலுள்ள மேலானவைகளை நாடுகின்றனவா? என்னுடைய செயல் நோக்கங்கள் தூய்மையானவைகள்தானா? சபை கூடி வரவில் நான் ஏன் கர்த்தருடைய பிள்ளைகளுடன் சேர்ந்துகொள்கிறேன்? அவர்கள் என்னைக் காணவேண்டுமென்பதற்காகவா? அன்றி, கர்த்தரோடும் அவருடைய பிள்ளைகளோடும் இனிது உறவாடி மகிழும் ஐக்கியத்திற்காகவா? இவ்வாறு நம்மை நாமே ஆராய்ந்து அறிந்துகொள்ளுதல் நன்மை பயக்கும்.

“அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்” இந்த அருட்பேறுகளுடன் இணைக்கப்பட்டுள்ள வாக்குத்தத்தங்கள் நிகழ் காலத்திலும் வருங்காலத்திலும் நிறைவேறத்தக்கவைகளாக இருக்கின்றனவென்பதினை நாம் மீண்டும் நினைவுபடுத்துவது நல்லது. இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் ஆவிக்குரிய காரியங்களைப் பகுத்தறியும் ஆற்றலைப் பெற்றிருக்கிறார்கள். தங்களுடைய அகக்கண்களினால் தெய்வீகப் பண்புநலன்களை நோக்கும் தெளிந்த பார்வையுடையவர்களாயும், தேவனுடைய தெய்வீக பண்பின் மேன்மையை உள்ளத்தால் உணர்கிறவர்களாயுமிருக்கிறார்கள். கண்ணானது தெளிவாயிருந்தால் உடல் முழுதும் வெளிச்சமாயிருக்கும்.

விசுவாசமானது இருதயத்தைச் சுத்தமாக்குகிறது என்னும் சத்தியத்தில் அவர்கள் தேவனைத் தரிசிக்கிறார்கள். கிறிஸ்துவின் முகத்திலுள்ள தேவனுடைய மகிமையின் அறிவாகிய ஒளி (2.கொரி.4:6) அதாவது தெய்வீகமான பரிசுத்தமும் தெய்வீகமான அருளுடமையும் கலந்து ஒளிருகிற ஒளியின் வெளிப்பாடு! இதுவே சத்தியமாகும். இருதயத்தில் சுத்தமுள்ள மனிதனோ தெய்வீகமான பண்பு நலன்களைக் காணுமாறுள்ள தெளிந்த பார்வையை உடையவானயிருப்பதுடன், தேவனோடுள்ள நெருக்கமும் இன்பமுமான ஐக்கியத்தில் ஒன்றித் திளைக்கிறான். அவன் தேவனிடம் மிகவும் நெருக்கமாய்க் கொண்டு வரப்படுகிறான். தேவனுடைய மனமே அவனுடைய மனம், தேவனுடைய சித்தமே அவனுடைய சித்தமுமாம். அவனுடைய ஐக்கியம் மெய்யாகவே பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது.

இவ்விதமாக, இந்த உலகில்தானே இருதயத்திலே பரிசுத்தமுள்ள மக்கள் தேவனைத் தரிசிக்கிறார்கள். இனிவருங்காலத்திலோ தேவனை அறிகிற அவர்களுடைய அறிவானது மேலும் பரவிப் பெருகுகிறது. தேவனோடுள்ள அவர்களுடைய ஐக்கியம் மேலும் மேலும் நெருக்கமடைகிறது. பழைய ஏற்பாட்டின் காலத்தில் சிறப்புரிமைகளோடு ஒப்புநோக்கும்போது, நாம் இப்பொழுது திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் காண்கிறோம் (2.கொரி.3:18). ஆயினும் இதனிலும் மேலான ஓர் ஏற்பாட்டின் சிறப்புரிமைகளோடு ஒப்புநோக்குமிடத்து இப்பொழுது நாம் குறைந்த அறிவுள்ளவர்கள். நம்முடைய அறிவும் தீர்க்கதரிசனமும் குறைவுள்ளது. ஆயினும் நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம். அப்பொழுது நாம் முகமுகமாய்ப் பார்ப்போம். அப்பொழுது நாம் அறியப்பட்டிருகிறபடியே அறிந்து கொள்வோம் (2.கொரி.13:9-12). சங்கீதக்காரனுடைய வாய்மொழியின்படி, நாமோ நீதியில் அவருடைய முகத்தைத் தரிசிப்போம். நாம் விழிக்கும்போது அவருடைய சாயலால் திருப்தியாவோம் (சங்.17:15). அந்நாள் மட்டும் “இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்” என்னும் இயேசுவின்

திருவாய் மொழியின் முழுமையான பொருளானது அறிந்துகொள்ளப்படமாட்டாது.

7. ஏழாம் பேறு

“சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்.
அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்”

பொருள் விளக்கம் செய்வதில் எல்லா அருட்பேறுகளிலும் மிகவும் கடினமானது இந்த ஏழாம் அருட்போறுதான். சமாதானம் பண்ணுகிறவர்கள் என்னும் சொல்லின் சிறப்புடைத் தன்மையையும் நோக்கத்தையும் உள்ளபடியே தீர்மானிப்பதிலேயே இடர்ப்பாடுண்டாகிறது. “சமாதானம் பண்ணுகிறவகள் பாக்கியவான்கள்” என்றோ நம்முடைய கர்த்தர் சொல்லவில்லை. இங்கே நம்முடைய பார்வையிலுள்ள சமாதானம்பண்ணுகிறவர்கள் தேவனுடைய புத்திரரென்று அழைக்கப்படுகிறபடியால், சமாதானம்பண்ணும் இப்பணியானது ஒருமனப்பாடு, இணக்கமாகியவைகளின் மேலுள்ள விருப்பம், மாம்ச சுபாவமுடைய மனிதனிடம் காணப்படுகிற சண்டை, சச்சரவு, குழப்பமாகியவைகளுக்கேதுவாகிய வெறுப்பு முதலிய எல்லாவற்றையும்விட மேற்பரப்பில் சாலச் சிறப்புடையதாகக் காட்சியளிப்பது தெளிவு.

“சமாதானம் பண்ணுகிறவர்கள்” என்னும் சொற்றொடருக்குரிய மெய்யான பொருள் விளக்கத்தைக் கண்டடைவதற்கு நமக்கு உறுதுணையாயிருப்பவை மூன்று: அவைகள்

1. நம்முடைய கர்த்தருடைய பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்த மக்களின் ஒழுக்கநிலை
2. அருட்பேறுகளின் வரிசையில் இவ்வருட்பேறுக்குரிய இடம்
3. இதனைப் பின்தொடர்ந்து வருகிற அருட்பேறுடனுள்ள இதன் தொடர்பு.

யூதர்கள் பெரும்பாலும் புறஜாதி மக்களை வெறுப்பூட்டும் இகழ்ச்சியோடும் பகையுணர்வோடும் நோக்கினர். மேசியாவின் அரசாட்சியின்கீழ், இச்சாதிகள் முற்றுமாய் அழிக்கப்பட வேண்டும் அல்லது தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்களின் ஆதிக்கத்தின் கீழ் அடிமைகளாய் வாழவேண்டும் என்று எண்ணி இருந்தனர் (இக்கருத்தானது யோசுவாவின் புத்தகத்தில் நாம் வாசிக்கிற யூதர்களுடைய முற்பிதாக்களின் அனுபவங்களை ஆதாரமாய்க் கொண்டுள்ளது). அவர்களுடைய மதிப்பின்படி மேசியாவாகிய பிரபுவின்கீழ் இஸ்ரவேலரைக் கொடுமைப்படுத்தின புறஜாதி மக்களை பழிவாங்குவதற்காகப் போராடுபவர்களாகிய யூதர்களே பாக்கியவான்களாகும் தகுதிபடைத்தோராவர்.

புதிய ஏற்பாட்டின் ஆவி எவ்வளவு மாறுபட்டது, பாருங்கள்! இயேசுவானவருடைய பிறப்பினைக் கொண்டாடின பரம சேனையாகிய தேவதூதர்கள் பாடிய, “உன்னதத்திலிருந்து தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனிதர் மேல் பிரியமும் உண்டாவதாக” என்னும் பாடலுடன் புதிய ஏற்பாட்டின் ஆவி எவ்வளவு இசைந்து காட்சியளிக்கிறது!

இந்த ஏழாம் அருட்பேறானது நல்லொழுக்கத்தைவிட நன்னடத்தையோடுதான் பெரிதும் தொடர்புடையது. ஆயினும் இன்றியமையாமையை முன்னிட்டு, சமாதானத்தை உண்டாக்கும் ஊக்கமான முயற்சியில் ஈடுபடுமுன்னர், சமாதானத்தின் ஆவிதான் முதற்கண் ஆளுகை செய்யவேண்டும். மலைப்பிரசங்கத்தின் இம்முதற் பகுதியில் தம்முடைய இராச்சியத்தின் குடிமக்களுடைய நல்லொழுக்கத்தினைக் குறித்து நம்முடைய கர்த்தராகிய இயேசுவானவர் விளக்குகிறாரென்பது நினைவிற்கொள்ளப்படவேண்டும்.

முதலாவதாக அவர்கள் உள்ளத்தில் செயல்படுகிற தெய்வீக கிரியையின் முதல் அனுபவத்தை நினைவூட்டுகிறார். முன்னர் சொல்லப்பட்டதுபோல், அவர்களுடைய உள்ளங்களை ஆளுகை செய்கிற மறைமுகமான கிருபைகளை விளக்குகிற முதல் நான்கு அருட்பேறுகளையும் ஒருதொகுப்பாக்கலாம். கிறிஸ்துவானவருடைய அருள் ஆட்சியின்கீழ் வாழும் மக்கள் தன்னிறைவின்றித் தங்களுடைய ஆவியில் எளிமையும் சிறுமையுமானவர்கள். அவர்கள் தங்களுடைய ஆவிக்குரிய நிலைமையை முன்னிட்டுத் திருப்தியில்லாமல் துயரப்படுகிறார்கள். அவர்கள் தங்களை முக்கியமானவர்களாக என்ணாமல், சாந்தமும் மனத்தாழ்மையுமாயிருக்கிறார்கள். சுயநீதியைத் தேடாமல், அவர்கள் தேவனுடைய நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்களாயிருக்கிறார்கள். அடுத்து வருகிற மூன்று அருட்பேறுகளில் நம்முடைய கர்த்தர் அவர்களை ஆளுகைசெய்யும் நேர்முகமான கிருபைகளைக் குறிப்பிடுகிறார். தேவனுடைய இரக்கத்தினை ருசிபார்த்தவர்களாகி அவர்கள் மற்றவர்களிடத்தில் இரக்கம் பாராட்டுகிறார்கள். தேவ ஆவியானவரிடமிருந்து ஆவியின் சுபாவத்தைப் பெற்றுக் கொண்ட அவர்களுடைய கண்கள் தேவனுடைய மகிமையைக் காண்கிற தெளிவான பார்வையுடையன. கல்வாரிச் சிலுவையின் இரத்தத்தினால் கிறிஸ்துவானவர் உண்டாக்கியுள்ள சமாதானத்திற்குள் பிரவேசித்துள்ளபடியால், இப்பொழுது மற்றவர்களும் இந்தச் சமாதானத்தைப் பெற்று அனுபவிக்கிற நல்வாழ்வுக்குள் கொண்டுவரப்படுமாறு தேவனால் பயன்படுத்தப்படும் கருவிகளாகும்படி அவர்கள் மிகவும் ஆவலுடையவர்களாயிருக்கின்றனர்.

இந்த ஏழாம் அருட்பேறும் இதனையடுத்து உடனடியாகவே தொடர்கிற எட்டாம் அருட்பேறுமாகியவற்றினிடையே நிலவுகிற தொடர்புதான் இவ்வேழாம் அருட்பேற்றின் மெய்ப்பொருளை உறுதிப்படுத்துவதற்கு நமக்கு

உதவியாயிருக்கிறது. இந்நூலின் முந்திய அதிகாரங்களில் இத்திருவருட்பேறுகள் இரண்டிரண்டிடாக இணைக்கப்பட்டுத் தொகுப்புகளாகவுள்ள மெய்ந்நிலையினை நாங்கள் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறோம். ஆவியின் எளிமையானது எப்பொழுதும் துயரப்படுதலுடன் இணைந்து வாழும். அவ்வண்ணமே சாந்தமும் மனத்தாழ்மையும் தேவனுடைய நீதியின்மீதுள்ள பசிதாகத்துடன் இணைந்து காட்சியளிக்கிறது. அவ்வாறே மக்கள்மேல் இரக்கம் பாராட்டுதலும் தேவனை நாடுகிற இருதயத்தின் தூய்மையும் ஒன்றோடொன்று இணைந்து காட்சியளிக்கிறது. இறுதியாக சமாதானம் பண்ணுதலும் நீதியினிமித்தம் துன்பப்படுதலும் ஒன்றாயிணைகின்றன. இப்படியாக ஏழாம் அருட்பேற்றினைக் கூறுகிற 9 ம் வசனத்திற்குரிய திறவுகோல் மத்.5:10-12ம் வசனங்கள் நமக்கு விளக்குகின்றன.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள மூன்று கருத்துக்கோணங்களின் ஒவ்வொன்றின் வாயிலாகவும் ஏழாம் அருட்பேற்றினை அணுகுவோமானாலும், ஒரேமுடிவுக்குத்தான் வருகிறோம். முதலாவதாக, தேவன் பழையதும் புதியதுமான இரண்டு உடன்படிக்கைகளின் கீழும் வாழ்ந்த அல்லது வாழ்கிற மக்களிடம் ஒப்படைத்துள்ள வேலைகளினிடையேயுள்ள மாறுபாட்டினை நோக்குவோம். நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தபிறகு, இஸ்ரவேலர்கள் பட்டயத்தை எடுத்துக்கொண்டு கானான் தேசத்தை வென்று கீழ்ப்படுத்தவேண்டுமென்று தேவனிடமிருந்து ஆணை புறப்பட்டது. யேகோவாவின் பகைவர்களை அங்கே அழித்து ஒழிக்கவேண்டுமென்பதே தேவனுடைய ஆணை. உயிர்த்தெழுந்த கிறிஸ்துவோ தம்முடைய திருச்சபைக்கு வேறுப்பட்ட கட்டளைகளைக் கொடுத்துள்ளார். சுவிசேஷத்தின் அருளாட்சியாகிய இக்காலக்கட்டத்தில் கல்வாரிச் சிலுவையின் தூதர்களாகப் புறப்பட்டுப்போய், இப்பொழுது தங்கள் சுபாவத்தின்படி நம்முடைய போதகரும் ஆண்டவருமாகிய இயேசுவுக்கு விரோதமாகப் பகை பாராட்டுகிற எல்லாச் சாதிகளும் அவருடன் நல்மனம்பொருந்தி ஒப்புரவாகும்படி நாம் அவர்களுக்குப் போதிக்கவேண்டும்.

இரண்டாவதாக சமாதானம்பண்ணுகிற இக்கிருபையானது, முந்திய வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஆறுகிருபைகளோடும் இணைந்து, குறைநிரம்பி வளமூட்டுகிறது. சமாதானம்பண்ணுகிற இந்த நற்பணியே கிறிஸ்தவ நல்லொழுக்கத்திற்கு முழு நிறைவுடைமையை அளிக்கிறது என்று போதிக்கும் நம்முடைய கர்த்தருடை உள்நோக்கத்தை இவ்வருட்பேறானது ஒருவேளை சுட்டிக்காண்பிக்கலாம். சமாதானத்தின் தூதர்களாக அனுப்பப்படுவததென்பது சொல்லிமுடியாத சிலாக்கியமாயிருக்கிறதென்பதை நாம் உறுதியாய்ச் சொல்ல முடியும். மேலும் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிற மக்கள், தங்களோடு உடன்வாழும் பாவிகளின் இரட்சிப்பைக் குறித்துக் கவலையற்றிருப்பார்களாயின், அவர்களுடைய மார்க்கம் குறைவுடைய

கிறிஸ்துமார்க்கமேயாகும். தேவனுடைய பிள்ளைகளுக்கென்று வைக்கப்பட்டிருக்கிற நலமிக்க சுதந்தரத்தில் பங்குபெறுவதற்கும், அதனை எதிர்பார்ப்பதற்கும் அவர்களுக்கு உரிமையில்லை.

மூன்றாவதாக, சமாதானம் பண்ணுவதாகிய இக்காரியத்திற்கும், மத் 5:10-12 ஆம் வசனங்களில் நம்முடைய கர்த்தர் குறிப்பிடுகிற நீதியினிமித்தம் வருகிற துன்புறுத்தல்களுக்குமிடையே ஒரு தெளிவான தொடர்பு இருக்கிறது. கிறிஸ்துவானவர் தம்முடைய சொற்பொழிவில் ஒன்றோடொன்று இணையாக அல்லது தோழமையாகக் குறிப்பிடுகிற கிறிஸ்தவ ஒழுக்கமும் அனுபவமுமாகிய இவ்விரு பகுதிகளையும்பற்றிச் சொல்லுமிடத்து, தம்முடைய சீடர்களுக்கு அவர்களுடைய கடமையின் பாதையில் நேரிடுகிற எதிர்ப்புகள், அவர்கள் எந்த ஊழியத்தின்மீதுள்ள அவர்களுடைய உண்மைகளோ அந்த ஊழியத்தின் மீதுள்ள அவர்களுடைய உண்மைத்தன்மையின் விளைவே என்று போதிக்கிறார். இவ்வாறாக கிறிஸ்துவானவரை எதிர்த்துப் போராடுகிற மக்களை அவரோடு ஒப்புரவாக்கும் பணியில் நாம் தேவனுடைய கரங்களிலுள்ள ஆயுதங்களாயிருக்கிறோம் என்பதனையே இப்பாடப்பொருளாகிய சமாதானம்பண்ணுதல் முதன்மையாகக் குறிப்பிடுகிறதென்பதனை நாம் உறுதியாக நம்பலாம் (யோவான் 15:17-27 ஒப்புநோக்குக)

நம்முடைய இப்பாடத்தில் குறிப்பிடப்படுகிற சமாதானம்பண்ணுகிறவர்களே பாவிகளைத் தேவனோடு ஒப்புரவாகும்படி வேண்டிக்கொள்ளுகிற மக்களாயிருக்கிறார்கள் என்னும் முடிவுக்குள் நம்மை நடத்திச்சென்ற காரணங்களை இதுகாறும் நாம் தியானித்துக்கொண்டிருந்தோம் (2.கொரி.5:20). வேதவியாக்கியானிகளில் பெரும்பாலாரும் தங்களுடைய பொருள் விளக்கத்தில் நம்மை மனநிறைவடையுமாறு செய்யவில்லை. இவ்வருட்பேற்றினில் ஒற்றுமையை வளர்த்தல், உடைப்பினை அடைத்துச் சீராக்குதல், மனமுறிவடைந்தோரை மீட்புறப் பண்ணுதல் ஆகிய முயற்சிகளில் ஈடுபடுகிற மக்களுக்குக் கிறிஸ்துவானவர் அருளுகிற நல்வாழ்த்துதல்களே என்று விளக்கவுரையாளர்கள் கூறுகின்றனர். இவைகளெல்லாம் மெய்யாகவே நலமிக்க நன்முயற்சிகள்தான் என்பதையும் கிறிஸ்தவனாயிருக்கிற ஒருவனுக்குள் கிறிஸ்து வாசம் பண்ணுகிறபடியால், அவன் சமாதானப் பிரியனும் நல்லிணக்கமுடையவனுமாயிருக்கிறான் என்பதையும் நாங்கள் முழுவதுமாய் ஏற்றுக்கொள்ளுகிறோம். அதேவேளையில் கிறிஸ்துவானவர் திருவுளம்பற்றின சமாதானம் பண்ணுதல் இது மாத்திரமே என்று கூறமுடியாது.

துன்மார்க்கருக்குச் சமாதானமில்லை என்பதனைக் கிறிஸ்துவுக்குள்ளிருக்கிற விசுவாசியானவன் அறிந்திருக்கிறான். ஆகையால், துன்மார்க்கர் தேவனோடு பழகி அவருடன் சமாதானமாயிருக்கவேண்டுமென்று (யோபு 22:21) அவன்

பேரார்வங்கொள்கிறான். தேவனோடுள்ள சமாதானமானது நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வாயிலாகவே வருகிறதென்பதனை (கொலோ.1:19-20) விசுவாசிகள் அறிந்திருக்கிறார்கள். இக்காரணம்பற்றியே நாமும் பரிசுத்தஆவியானவருடைய நடத்தலின்படியே நம்முடன் வாழும் மக்களிடம் கிறிஸ்து இயேசுவை அறிமுகப்படுத்தி அவரைக்குறித்துப் பேசுகிறோம்.

“சமாதானத்தின் சுவிசேஷத்துக்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாய்” நாம் இருக்க வேண்டும் (எபேசி.6:15). இவ்வாறாகத் தேவனுடைய கிருபையைக் குறித்துச் சாட்சி சொல்லும்படி நாம் எப்பொழுதும் ஆயத்தமாயிருக்க வேண்டும். நம்மைக் குறித்தே, “சமாதானத்தைக்கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள்” என்று சொல்லப்பட்டுள்ளது (ரோமர் 10:15). இத்தகையோரெல்லாம் நற்பேறுடையவர்களாயிருக்கிறார்களென்று நம்முடைய கர்த்தர் சொல்லுகிறார். அவர்கள் ஆசீர்வதிக்கப்படாமலிருக்க முடியாது. நம்முடைய ஆத்துமாவில் அனுபவிக்கிற சமாதானத்தோடு, தொடர்ந்து மற்றுவர்களும் இச்சமாதானத்திற்குள் பிரவேசிக்குமாறு அவர்களையும் தேவனுடைய கிருபையினால் கொண்டுவருவதன் விளைவாய் உண்டாகும் மகிழ்ச்சியும் நம்முடைய மகிழ்ச்சியாயிருக்க வேண்டும்.

பரந்த அளவில் நோக்குமிடத்து, சமாதானம்பண்ணுதல் பற்றிய கிறிஸ்துவின் இத்திருவாய் மொழியானது அவருடைய பின்னடியார்களாகிய சீடர்களிடமுள்ள ஒரு தனிச் சிறப்பான ஆவியையும் குறிப்பிடலாம். அந்த ஆவியானது சண்டை சச்சரவுகளையும் குழப்பங்களையும், கல்லுள்ளங்களையும் கனியச் செய்யும் ஆறுதல் மொழிகளால் அடக்கி, அதன் விளைவான அமைதிக்குள் மகிழ்கிறது. அநீதிகளைத் திருத்திச் சீர்ப்படுத்த முற்படுகிறது. இன்னல்கள், இடையூறுகளாகியவற்றை அகற்றியும், கோபம் தாபம் எரிச்சல் மனக்கசப்பு ஆகியவைகளின் முனைப்பினை அழித்தும், அடக்கியும் இவ்வாறாக இனிமையான உறவு முறையை மீண்டும் கொண்டுவருவதற்குப் பெரிதும் நாட்டங்கொள்ளுகிறது.

சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள். ஈண்டு, “என்னப்படுவார்கள்” என்னும் சொல்லானது, தேவன் தமக்குச் சொந்தமான மக்களாக அவர்களை உரிமை பாராட்டுவாரென்று யாவராலும் அறியப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படுவார்களென்னும் பொருளில் வந்துள்ளது.

அவர் சமாதானத்தின் தேவன் (எபி.13:20). மனுக்குலத்தை மீட்கும் அற்புதமான திட்டத்தில் தேவனுடைய மாபெரும் நோக்கமானது பூலோகத்திலிருக்கிறவைகளும் பரலோகத்திலிருக்கிறவைகளுமாகிய எல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் கூட்டிச் சேர்க்கப்பட வேண்டுமென்பதாயிருக்கிறது (எபேசி.1:9). கிறிஸ்தவ சத்தியத்தின் ஆதிக்கத்திற்குட்பட்டு சமாதானம் பண்ணுகிறவர்களாயிருக்கிற எல்லாரும், தேவனைப்போலவே அவருடைய செயல் தத்துவத்தினால் உயிரூட்டப்படுகிறார்களென்பதனைக் காண்பிப்பதோடு, "கீழ்ப்படிதலுள்ள பிள்ளைகளாக" (1.பேதுரு 1:14) தேவனுடை தயவுள்ள செயல் திட்டத்தில் அவரோடு ஒத்துழைக்கிறார்கள்.

உலகம் அவர்களைச் சமய வெறி கொண்டவர்களாக எண்ணி இகழும். சமயக் கோட்பாட்டாளர்கள் அவர்களைக் குறுகிய மனப்பான்மையுடைய மதப்பிரிவினர்களாய் மதிப்பிடுகிறார்கள். அவருடைய உற்றார் உறவினர்கள் அவர்களை மதிகெட்டவர்களாக மதித்து இழிவாய் நோக்குகிறார்கள். ஆயினும் மாபெருந் தேவனோ அவர்களைத் தம்முடைய தனிப்பட்ட மதிப்பின் அடையாளமாய் பிரித்து, அவர்கள் தேவனுடைய மக்களாயிருப்பதைக் குறித்து அவர்களுக்குச் சாட்சி கொடுக்கும்படி அவர்களுக்குள் இருக்கிற தம்முடைய ஆவியானவரைத் தூண்டுகிறார். ஆயினும் இனிவரும் நாளில் அவர் தம் முன்னர்க் கூடிவந்துள்ள மக்கள் யாவருடைய முன்னிலையிலும் அவர்களைக்குறித்து வெளியரங்கமாய்ச் சாட்சி பகர்வார். இந்நாளில் தங்களுடைய வாழ்க்கைநிலை மிகவும் தாழ்வுற்றிருந்தாலும், தங்களுடன் வாழும் மக்களால் அசட்டைபண்ணப்பட்டு, பொய்யாய்க் குற்றஞ்சாட்டப்பட்டாலும், அவர்கள் பிதாவின் இராஜ்யத்திலே சூரியனைப்போல் பிரகாசிப்பார்கள். (மத்.13:43). அப்பொழுது மகிமையுள்ளதும், மிகுந்த ஆவலோடு நெடுங்காலமாய்க் காத்துக் கொண்டிருக்கிறதுமாகிய தேவனுடைய புத்திரர்களின் வெளிப்படுதல் உண்டாகும் (ரோ.8:19).

8. எட்டாம் பேறு

நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள். பரலோகராஜ்யம் அவர்களுடையது. என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள். சந்தோஷப்பட்டு, களிகூருங்கள் பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும். உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே."

கிறிஸ்தவ வாழ்க்கையானது விசித்திரமான முரண்படு மெய்நிகழ்ச்சிகளால் நிறைந்துள்ளது. அவைகளை நம்முடைய மனித அறிவினால் தீர்ப்பதென்பது

அரிதானது. ஆயினும் அவைகளை ஆவிக்குரிய உள்ளங்களோ எளிதில் புரிந்துகொள்ளுகின்றன. தேவனுடைய பரிசுத்தவான்கள் சொல்லிமுடியாத மகிழ்ச்சியினால் களிகூருகிறார்கள், ஆயினும் புலம்பலோடு துக்கப்படுகின்றனர். அது உலக மக்களுக்கு புதுமையாய் தோன்றுகின்றது. கிறிஸ்துவுக்குள் வாழ்கிற விசுவாசியானவன் தன்னுடைய எல்லா வாஞ்சைகளையும் பெற்று அனுபவிக்கும் அளவுக்கு உயிர் நிலையான மன நிறைவுக்குரிய முழு முதலுடன் தொடர்புகொண்டு இருப்பினும், மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல் அவன் தேவனை நோக்கி வாஞ்சித்துக் கதறுகிறான் (சங்.42:1). அவன் தன் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடிக் கீர்த்தனம்பண்ணுகிறான், அதேவேளையில் ஆழ்ந்த பெருமூச்சுடன் வேண்டுதல் செய்கிறான். அடிக்கடி அவனுடைய அனுபவமானது வேதனையும் தடுமாற்றமும் நிறைந்து காணப்படினும், இவ்வுலகத்தின் பொன்னையெல்லாம் கொட்டிக்கொடுத்தாலும், அவனோ அந்த அனுபவத்தை கைவிடவோ, அதனை விட்டுப் பிரியவோ மாட்டான். அவன் தேவனால் மெய்யாகவே ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறானென்பதற்குள்ள சாட்சியங்களுக்குள், அவன் பெற்றுள்ள இந்தப் புரியாத புதிராயிருக்கிற முரண்படுமெய் நிகழ்ச்சிகளும் அடங்கும். இத்தகைய சிந்தனைகளே இப்பொழுது நமக்குரிய வேதப்பாட வாக்கியத்தினால் எழுப்பப்படுகின்றன. நிந்திக்கப்படுகிறவர்களும், துன்புறுத்தப்படுகிறவர்களும், பொய்யாய்க் குற்றஞ்சாட்டப்படுகிறவர்களுமாகிய மக்கள் பாக்கியவான்களாய் இருக்கிறார்கள் என்பதனை வெறும் அறிவினால் யார் தான் முடிவுசெய்ய முடியும்?

மக்களுடைய சாபங்களும் கிறிஸ்துவின் நல்வாழ்த்துக்களும் ஒரே மக்களையே சென்று சேர்கின்றன என்பதானது வன்மையான மெய்ச்சான்றாய் இருக்கிறது. நீதியின் நிமித்தமாக ஒரு மனிதன், நிந்திக்கப்பட்டு, துன்புறுத்தப்பட்டு, பொய்யாய்க் குற்றஞ்சாட்டப்படுகிறான் என்று யார் தான் நினைத்திருக்கக்கூடும். அக்கிரமக்காரர்கள் மெய்யாகவே நீதியை வெறுத்துத், தம்முடைய அயலகத்தாரை வஞ்சித்துத் தீமை செய்கிறவர்களை நேசிக்கிறார்களா? தேவனையும் சமயத்தையும் மதிக்கிறவர்களே அவர்களுடைய வெறுப்புக்கும் பகைமைக்கும் உள்ளாகிறார்கள்.

கிறிஸ்தவர்கள் நீதியைச் செய்து, இரக்கத்தைச் சிநேகித்து (மீகா 6:8). அவைகளில் திருப்தியடைந்து, தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதைக் கைவிடுவார்களாயின் அவர்கள் இவ்வுலகத்தில்தானே சமாதானத்தோடு மட்டுமின்றி, பாராட்டுதலோடும் வாழ்வர். ஆயினும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்கதியாய் நடக்க மனதாயிருக்கிறவனோ துன்பப்படுவான் (1.தீமோ.3:12). இத்தகைய தேவபக்தியுள்ள வாழ்க்கையானது பொதுவான

மக்களுடைய அவபக்தியைக் கண்டித்துணர்த்துகிறது, இவ்விதமாக அவர்களுடைய கோபத்தையும் கிளறிவிடுகிறது.

மத்.5:10-12 ஒன்றாய் இணைந்து, இந்த அருட்பேறுகளின் வருசையில் எட்டாவதும் இறுதியுமான அருட்பேறாக அமைகிறது. இவ்வாறு இவ்வருட்பேறானது இரட்டிப்பானமுறையில் நோக்கப்படுதல் வேண்டுமெனவும் உடனடியாக நமக்கு அறிவுறுத்துகிறது. இந்த அருட்பேறுகளின் முழுமையான தொகுப்புக்கும் 10ம் வசனமானது, ஒரு பிற்சேர்க்கையைப்போல் அமைந்து, முந்தின வேத வாக்கியங்களில், கிறிஸ்துவானவர் விளக்கி உரைத்துள்ள நல்லொழுக்கத்தினைக் கைக்கொண்டு ஒழுகுவோர் அடையப்போகிற அனுபவத்தை விளக்குகின்றது.

மாம்ச சிந்தை தேவனுக்கு விரோதமான பகை (ரோ.8:7). தேவனுடைய மக்கள் எவ்வளவாக அவருடைய சாயலுக்கு ஒப்பாக வாழும் வாழ்க்கையை கைக்கொள்ளுகிறார்களோ அவ்வளவுக்கதிகமாக அவர்கள் தேவனைப் பகைக்கிற அவர்களுடைய பகைவர்களின் சீற்றத்திற்கு ஆளாகின்றனர், நீதியின் நிமித்தம் துன்பப்படுதல் என்றால் என்ன? நேர்மையாய் வாழ்வாங்கு வாழ்வதென் காரணமாக எதிர்ப்பினைத் தேடிக்கொள்வது என்பதுதான் அதன் பொருளாகும். தங்களுடைய கிறிஸ்தவக் கடமைகளை நிறைவேற்றுவோர், தங்களையே பிரியப்படுத்தி வாழும் தன்நலமான வாழ்க்கையுடைய மக்களைக் கண்டித்துணர்த்தி, அதன்வாயிலாக அவர்களுடைய பகைமையையும் வெறுப்பையும் கிளறிவிடுகின்றனர். அதன் விளைவாக ஏற்படுகிற துன்புறுத்தப்படுதலானது நச்சரிப்பு, பழித்துரைத்தல் ஆகியவைகளுடன் தொடங்கி, அடக்குமுறை, வதைத்து வேதனைப்படுத்துதல் முதலான பல்வேறு கொடுமைகளாகக் காட்சியளிக்கின்றன.

மத்.5:10-12 ஆம் வசனங்கள், ஏழாவது அருட்பேற்றிற்குத் துணைநின்று வளமூட்டுகிற ஒரு சொல்லைத் தன்னகத்தே கொண்டுள்ளன. சமாதானம்பண்ணுகிறவர்களாயிருக்கம்படி கிறிஸ்தவர்கள் மேற்கொள்ளுகிற முயற்சிகள் சாத்தானுடைய கோபத்தை எழுப்பி, அவனுடைய பிள்ளைகளைப் பெரிதும் கலக்குகின்றுன. சிலவேளைகளில் கலவரங்களையும் போராட்டங்களையும் உண்டாக்குகிற வாய்ப்பினை அறிமுகப்படுத்தி, நம்முடைய சமாதானமும் குலைக்கப்படுமளவுக்கு, கிறிஸ்துவையும் அவருடைய சுவிசேஷத்தையும் பற்றிய விசுவாசத்தின் பற்றுறுதியானது நம்மை நடத்துக்கூடும். அதனை எப்பொழுதும் நாம் எதிர்பார்க்க வேண்டுமென்பதற்காகவே நம்முடைய கர்த்தர் இங்கு நம்மை ஆயத்தப்படுத்துகிறார். இதற்குச் சான்றுகள் உண்டோவென்றால், “உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்புறுத்தினார்கள்” என்று

நம்முடைய கர்த்தர்தாமே சொல்லுகிறார். தேவனுக்காகச் செய்யப்படும் ஊழியங்கள் மகா பயங்கரமான எதிர்புகளை வெளிக்கொணர்கின்றன. மெய்யாகவே அப்படித்தான்! கிறிஸ்துவானவரைப் பகைக்கிற உலகத்தில்தான் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். அவருடைய சிலுவையானது அதனை ஒரே தடவையில் எல்லாக் காலங்களுக்கும் கண் கூடாகவே வெளிப்படுத்திக் காட்டிவிட்டது.

தம்முடைய சீடர்கள் தங்களுடைய கடமைகளை நிறைவேற்றும் பணியில் சகித்துக்கொள்ளும்படியாக அவர்கள் எதிர்பார்க்க வேண்டிய மூன்று வகையான பாடுகளை நம்முடைய கர்த்தர் மத்.5:11 ஆம் வசனங்களில் குறிப்பிடுகிறார். முதலாவது பாடு நிந்தனைகளாகும். அதாவது தூற்றித்திரிதல், பழிப்புரை, வசவுகள், ஏசிப் பேசுதல் முதலியனவாகும். இரண்டாவதாக பாடு துன்புறுத்தலாகும். இச்சொற்பொருளை உணர்த்துகிற கிரேக்கு மொழிச்சொல்லானது “பின்தொடர்ந்து வேட்டையாடுதல்” என்னும் பொருளில் வந்துளது. அதாவது தொல்லையளித்தலும் தொந்தரவு கொடுத்தலுமாம் (உடலையும் உள்ளத்தையும் வருத்துமாறு வில்லம்பு சொல்லம்புகளைப் பயன்படுத்துவது இதனுள் அடங்கும்). கிறிஸ்துவானவரால் பிடிபடுமுன்னர், தர்சுப்பட்டணத்தானாகிய சவுல் கிறிஸ்துவின் சபையை அடக்கி ஒடுக்கும்படி கையாண்ட துன்புறுத்தலும் வேட்டையாடுதலும் இதனைச் சாரும். (அப்.9ம் அதிகாரம்). மூன்றாவது வகையான பாடுகளைக் குறித்துக் கிறிஸ்துவானவர், “பலவிதமான தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்” என்று சொல்லுகிறார். இவ்வாறு தம்முடைய பரிசுத்தவான்களின் நல்லொழுக்கத்திற்கு மாசு கற்பித்து அவர்கள் அவமானத்திற்குள்ளாக்கும் நிலைமையைக் குறித்து அவர் ஈண்டு விளக்குகிறார்.

இறுதியாய்க் குறிப்பிடப்பட்டுள்ள இப்பாடுகள் எளிதில் புண்படக்கூடிய உடல் உள்ளங்களைப் பெரியும் பாதித்து இரட்த்தனையான வேதனையை உண்டாக்குகின்றன. இவ்வாறு தேவனுடைய பிள்ளைகளின் பாடுகளைத் தீவிரப்படுத்தும்பொருட்டு பிசாசானவன் எண்ணிறந்த பொய்க் குற்றச்சாட்டுக்களைக் கண்டுபிடிப்பதில் ஓய்வடைவதேயில்லை. நம்முடைய தவறான நடத்தை அல்லது அறிவிலாச் செயலினிமித்தமாக இல்லாமல், நம்முடைய கிறிஸ்துவின் பின்னடியார்களாயிருக்கிற ஒரே காரணத்தினிமித்தமே நமக்கு இத்துணை எதிர்ப்புகளும் வெறுப்புகளும் வருகின்றன. இதனைக் காணுமாறுதான், “நீதியினிமித்தம், என்னிமித்தம்” என்றும் சொற்றொடர்கள் நம்மை எச்சரித்துக் கொண்டிருக்கிறன்றன (1.பேதுரு 2:19-25 வசனங்களைப் படித்துப் பார்க்க)

உபத்திரவங்கள் எப்பொழுதும் தேவனுடைய பிள்ளைகளின் பங்காய் இருக்கின்றன. காயீன் ஆபேலைக் கொலை செய்தான். அவன் "எதினிமித்தம் ஆபேலைக் கொலை செய்தான்? தன்னுடைய கிரியைகள் பொல்லாதவைகளும் தன்னுடைய சகோதரனுடைய கிரியைகள் நீதியுள்ளுவைகளுமாயிருந்ததினிமித்தமே" (1.யோவான் 3:12). யோசேப்பு தன் சகோதரர்களால் துன்பப்படுத்தப்பட்டான். எகிப்து நாட்டில் அவன் நீதியினிமித்தம் சிறையில் தள்ளப்பட்டான் (ஆதி. 37,39 அதிகாரங்கள்). மோசே மேலும் மேலும் நிந்திக்கப்பட்டான் (யாத்.5:21,14:11, 16:2, 17:2) முதலிய வசனங்களைப பார்க்க. சாமுவேல் தள்ளப்பட்டான் (1.சாமு.8:5). எலியா அவமதிக்கப்பட்டான் (1.இராஜா.18:17). துன்புறுத்தவும்பட்டான். (1.இராஜா.19:2): மீகாயா பகைக்கப்பட்டான் (1.இராஜா.22:8). நெகேமியா ஒடுக்கப்பட்டவனும் அவமதிக்கப்பட்டவனுமாயிருந்தான் (நெகே. 4ம் அதிகாரம்).

தேவனுடைய உண்மையுள்ள சாட்சியாகிய இரட்சகரும் தாம் எந்த மக்களுக்காக ஊழியஞ் செய்தாரோ அந்த மக்களால்தானே கொல்லப்பட்டார். கல்லெறியுண்டு ஸ்தேவான் கொல்லப்பட்டான். பேதுருவும் யோவானும் காவலில் வைக்கப்பட்டார்கள். யாக்கோபு சிரச்சேதம் பண்ணப்பட்டான். பவுலின் கிறிஸ்தவ வாழக்கையும் ஊழியமும் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து வந்து கசப்பும் கடுமையுமான உபத்திரவங்களின் நீள்பெரும் தொகுப்பாயிருந்தது.

முந்திய காலங்களின் உபத்திரவங்களின் கடுமையைப் போல், பரிசுத்தவான்களுடைய இந்நாள்களின் உபத்திரவங்கள் அத்துணைக் கடுமையானவையன்று என்பது உண்மைதான். ஆயினும் அவைகள் மெய்யானவை. தேவனுடைய தயவினால் சட்டப்படியான உபத்திரவங்களினின்றும் நாம் நீண்ட காலமாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறோம். ஆயினும் உபத்திரவப்படுகிற கிறிஸ்தவன் எப்பொழுதம் நினைவிற்கொள்ளவேண்டிய வசனம் இதுவே, "ஏனெனில் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்கு மாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது" (பிலி.1:29). மேலும் யோவான் 15:19-20 வசனங்களிலுள்ள கிறிஸ்துவின் திருவாய்மொழியானது ஒருபோதும் தள்ளும்படி செய்யப்படமுடியாது.

"நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும். நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்துகொண்டபடியினாலும், உலகம் உங்ளைப் பகைக்கிறது. ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்லவென்று நான் உங்களுக்குச் சொன்ன வார்த்தையை நினைத்துக்கொள்ளுங்கள். அவர்கள் என்னைத் துன்பப்படுத்தினதுண்டானால், உங்களையும் துன்பப்படுத்துவார்கள். அவர்கள்

என் வசனத்தைக் கைக்கொண்டதுண்டானால், உங்கள் வசனத்தையும் கைக்கொள்ளுவார்கள்".

உலகத்தின் பகையானது ஏளனம், பழிப்புரை, பொய்க் குற்றுச்சாட்டு, மக்கள் சமுதாயத்தினின்றும் புறம்பாக்குதல் முதலிய பல்வேறு தோற்றங்களில் தன்னை வெளிப்படுத்துகிறது. ஆயினும் "நீங்கள் நன்மை செய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்கு முன்பாகப் பிரீதியாயிருக்கும்" (1.பேதுரு 2:20) என்னும் வசனத்திற்குச் செவி கொடுத்துக் கேட்கும்படி தேவகிருபை நம்மைப் பலப்படுத்துவதாக.

தமக்காகப் பக்தி விநயத்துடன் ஆற்றிவரும் ஊழியத்தினிமித்தம் பாடுபடும்படி அழைக்கப்பட்ட மக்களையே நற்பேறு பெற்றவர்களென்று நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இங்கு அறிவிக்கிறார். இரட்சகருடைய பாடுகளின் ஐக்கியத்தைப் பெற்று அனுபவிக்கிற மகாமேன்மையான சிறப்புரிமைக்கு அவர்கள் தகுதியுடைவர்களாயிருக்கிறார்கள். ஆகையால் அவர்கள் நற்பேறுபெற்றவர்கள். "உபததிரவம் பொறுமையையும், பெறுமை நல்லொழுக்கத்தையும் , நல்லொழுக்கம் நம்பிக்கையையும் உண்டாக்குகிறது........." (ரோமர் 5:3-5) ஆகையால், அவர்கள் நற்பேறுபெற்றவர்கள். இனிவரவிருக்கிற அந்தப் பெரிய நாளில்தானே அவர்கள் தேவனிடமிருந்து முழுமையான பலனைப் பெற்றுக்கொள்ளுவார்களாகையால் அவர்கள் நற்பேறுபெற்றவர்கள். மெய்யாகவே இங்கும் மிகவும் பெரிதான ஆறுதல் அவர்களுக்கு உண்டு.

ஆகையால், பொல்லாங்கன் எய்கிற தீக்கணைகளினிமித்தமாக சிலுவையின் வீரர்கள் கலக்கமடைய வேண்டாம். அதற்குமாறாக அவர்கள் தேவனுடைய சர்வாயுதவர்க்கங்களையும் உறுதியாய்த் தரித்துக்கொள்வார்களாக. கிறிஸ்துவானவரைப் பிரியப்படுத்தும்படியாக அவர்கள் ஆற்றிவருகிற பக்திமேன்பாட்டிற்குரிய செயல்களைக்குறித்து, தாங்களே கிறிஸ்தவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற மக்கள் குறைகூறுவர்களாயின், அதற்காகவும் அவர்கள் அதைரியப்படவேண்டாம். கடுமையான சோதனையைச் சந்திக்கும்போது தேவன் தங்களுடைய ஊழியத்திற்கு ஒப்புறுதி வழங்கவில்லையோவென்று ஐயுறவுகொள்ளவும் வேண்டாம்.

"மகிழ்ந்து களிகூருங்கள்" கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தினிமித்தம் வருகிற உபத்திரங்களைப் பொறுமையுடன் சகித்துக்கொள்ள வேண்டுவதோடமையாது, அவைகளை நாம் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளவும் வேண்டும். நாம் உபத்திரவங்களை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதற்குரிய காரணங்கள் மூன்று.

ஒன்று: இந்த உபத்திரவங்கள் கிறிஸ்துவினிமித்ததே நமக்கு வருகின்றன. அவர் மீட்டுக்கொள்ளும்படி இத்துணைப்பாடுபட்டபடியால், அவருக்காக சிறிதளவாயினும் பாடுபடும்படி நாம் அழைக்கப்படும்பொழுது, நாம் பெரிதும் மகிழ்ந்து களிகூரவேண்டுமல்லவா?

இரண்டு: இந்தச் சோதனைகளும் துன்பங்களும் கிறிஸ்துவுக்காக இரத்தச்சாட்சிகளாய் மரித்த பரிசுத்தவான்களுடைய கூட்டுறவில் அவர்களோடுள்ள ஐக்கியத்திற்குள் நம்மைக் கொண்டுவருகின்றன. கிறிஸ்துவுக்குள் நாம் பாடுபடுகிற உபத்திரவங்களும் வருத்தங்களும் நம்மைப் பரிசுத்தமான தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்கள் ஆகியவர்களுடன் இணைக்கின்றன. அத்தகைய கூட்டுறவில் நமக்கு எதிராகச் சாட்டப்படுகிற பொய்யான குற்றச்சாட்டுகள் புகழ்ச்சியாகின்றன. நிந்தனைகளும் அவமானங்களும் மகிமையாய் மாறுகின்றன.

மூன்று: கிறிஸ்துவினிமித்தம் படுகிற பாடுகளுக்குப் பரலோகத்தில் நமக்கு மிகுந்த பலனுண்டென்று வாக்குத்தத்தம் பண்ணப்பட்டுள்ளது. ஆகையால், இக்காலத்துப் பாடுகள் எவ்வளவு பயங்கரமாயிருப்பினும் நாம் மகிழ்ந்து களிகூரலாம். “அநித்தியமான பாவ சந்தோஷங்களை அனுபவிப்பதைப் பார்க்கிலும் கிறிஸ்துவோடேகூட துன்பத்தை அனுபவிப்பதையே தெரிந்துகொண்ட” நாம் (எபி.11:25) அவருடைய நிச்சயமான வாக்குத்தத்தத்தின்படி அவரோடேகூட ஆளுகையும் செய்வோம் (ரோமர் 8:17). கிறிஸ்துவின் நாமத்திற்காக தாங்கள் அவமானமடைவதற்கும் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால் சந்தோஷமாய் ஆலோசனை சங்கத்தைவிட்டுப் புறப்பட்டுப்போன பேதுருவையும் யோவானையும் நினைத்துக்கொள்ளுங்கள் (அப்.5:41). அவ்வணமே கடுமையாக அடித்துக் காயப்படுத்தப்பட்டு, பிலிப்பு பட்டணத்தில் தொழுமரத்தில் மாட்டிவைக்கப்பட்டிருந்தபோது, பவுலும் சீலாவும் நடு இரவு வேளையில் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள் (அப்.16:25). பரலோகத்தில் அதிக மேன்மையும் நிலையுள்ளதுமான சுதந்தரம் அவர்களுக்கு உண்டென்று அறிந்து யூதேயா நாட்டிலுள்ள ஆதி அப்போஸ்தல சபையிலுள்ள விசுவாசிகள் தங்களுடைய ஆஸ்திகளையும் சந்தோஷமாய்க் கொள்ளையிடக் கொடுத்தார்கள் (எபி.10:34) என்று நாம் வாசிக்கிறோம்.

ஆகையால், கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இந்த திருவாய்மொழியினின்றும் தேவையான எல்லா ஆறுதல்களையும் வல்லமையையும் பெற்றுக்கொள்ளும்படி இழித்துப் பழித்துக் கூறப்பட்டும், தவறாக எண்ணப்பட்டும், ஒடுக்கப்பட்டுமிருக்கிற

தேவனுடைய பரிசுத்தவான்கள் அனைவரையும் தேவ கிருபையானது பலப்படுத்துவதாக!

தொகுப்பு: சகோ. ஆ. திருமுருகன்
atmurugan@gmail.com